ISSN 1703-9185

# ஆத்மஜோதி

# Arthmajothy

January- March 2011

விகிர்தி தை - பங்குனி 2011

இலவச வெளியீடு

3000 பிரதிகள்



தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்

# V. K. JEGAN INC.

**Custom Framing Book Depot**

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo, திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-497-5690**
**Cell 416-508-4940**

2537 Warden Ave., Scarborough
(Warden & Bridel town Circle)


# Non-Medical Insurance

வைத்திய பரிசோதனையற்ற
ஆயுட் காப்புறுதியை
பெற்றுக் கொள்ள அழையுங்கள்



## கென் கிருபா

**Ken Kirupa**, AICB
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
www.familyprotection.ca




உ

சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: *1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185



கனடா மலர் 12:
இதழ் 1
விகிர்தி வருடம்
தை- பங்குனி
திரு. ஆண்டு *-2041*
ஆங்கில ஆண்டு *2011*



**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்



**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம்


1. மனதில் உறுதி வேண்டும்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. இறைவனைத் தியானிப்பவர்களுக்குத் துன்பம் இல்லை
4. நாங்கள் சைவ சமயத்தவரா வேற்று மதத்தினரா?
5. திவ்ய ஜீவன சங்கத்து சுவாமிகள் ஓங்காரானந்தாவின் தரிசனம்
6. திருத்தல யாத்திரை 2010
7. தவத்திரு கோவை சிவப்பிகாச சுவாமிகள்
8. இந்துசமயப் பேரவைச் செய்திகள்
9. சைவ உலகம் வணங்கிப் போற்றிய..
10. Hinduism Cosmology and timeline
11 சொற்பொழிவுக்கு ஒரு தங்கம்மா அப்பாக்குட்டி
12 ஒரு தமிழ்நாட்டுக் காப்பியம்
13. நிறைவான உள்ளம் கொண்ட
14. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

ஆசிரியர் தலையங்கம்

# மனதில் உறுதி வேண்டும்

நேற்றுத்தான் 2010 பிறந்ததுபோல இருக்கின்றது. கண்மூடி முழிக்கமுன் 2011 பிறந்து விட்டது. 2012 கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றது. காலதேவன் ஓடிக் கொண்டிருக்கின்றான். காலகாலன் ஆடிக் கொண்டிருக்கின்றான்.

எங்களுக்கும் வயது போய்க் கொண்டிருக்கின்றது. இயங்கிக் கொண்டிருக்கும்வரை நாம் அதைப்பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. நினைத்துப் பார்த்து என்ன செய்யப் போகின்றோம் என்று கேட்கிறீர்களா?

காலத்தைக் கட்டிவைத்தல் என்ற அந்த ஒன்றைத் தவிர, செய்வதற்குப் பல 'அலுவல்கள் இருக்கின்றன. வயதுபோய்ப் பாயிலே படுப்பதற்கு முன் செய்வதற்காகப் பல கருமங்கள் காத்திருக்கின்றன.

அவை பொதுப்பணிகள். குடும்பத்துக்காக, பிள்ளைகுட்டிகளுக்காக உழைக்கவே நேரம் போதவில்லை. பொதுப்பணிகளுக்கு எங்கே நேரம் இருக்கிறது என்று கேட்பவர் சிறியோர். பெரியோர் செயற்கரிய செய்பவர். உலகத்துக்குச் செய்யாது போனாலும் ஊருக்கு உழையுங்கள். மற்றவர் செய்வதைச் செய்வது அரிதான செயலல்ல.

அரிதான மனிதப்பிறவி அரிதான தொண்டுகளுக்கேயுரியது என்பதை எமக்கு அறிவுறுத்தும் நூல் திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டர் திருவருளை முன்வைத்துத் தாம் பின்னாக நடப்பவர்கள். அவர்கள் அதிகம் செய்யவில்லை. அவரவர் தம்மாற் செய்யக்கூடிய பணி ஒன்றைத் தெரிவுசெய்து அதிற் குத்திட்டு நின்றவர்கள். அற்ப ஆசைகளைக் கொன்றவர்கள். சோதனைகளை வென்றவர்கள்.

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை அரிதான செயல் ஒன்றைத் தமிழ் நாட்டிற் செய்திருக்கின்றது. இந்து சமயப்பேரவை திருமுறைகளை கனடாவில் ஓதுவித்து அடியார்களைத் திருவருளில் ஆழ்த்திவருகின்றது. தமிழ்நாட்டிலும் பேரவை அடியார்கள் திருமுறைகளைப் பல ஆலயங்களில் 2007, 2010 ஆண்டுகளில்

ஓதி நிறைவு விழாவைச் சிதம்பரத்தில் 04.01.2011ல் நடத்தியிருக்கின்றார்கள். திருமுறை முற்றோதல் நிறைவு விழா மலர் ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்களது தொண்டு திருவருள் வழிப்பட்டது.

திருவருள் என்பது சிவபெருமானின் அருட்சக்தி. பரனுடைய சக்தியையே நாம் பராசக்தியாக வழிபடுகின்றோம். வடமொழியில் இதனைச் சிற்சக்தி என்பர்.
சிவபெருமானை வணங்குகின்றோம் என்றால் சக்தியையும் சேர்த்து வணங்குகின்றோம் என்று பொருள். சக்தியை வணங்குகின்றோம் என்றால் எமது சக்தியை வளர்க்க விரும்புகின்றோம் என்று பொருள்.

சக்தி - வலிமை. காலத்தால் கசங்கி விழுமுன் எமது உடல் வலிமையைப் பயன்படுத்தி ஓரிரண்டு செயற்கரிய செயலையாவது செய்தல் வேண்டும் என்று துணியுங்கள்.

மனத்தில் உறுதியுண்டானால் நெருங்கிய பொருள் கைப்படும்.

திருவருளை நினைந்து தொடங்குங்கள். எல்லாம் சிறப்பாக நடக்கும். ஒரு பொல்லாப்பும் இல்லை!

- வி. கந்தவனம்
ஆசிரியர்

---

## 2010 தை மாதத்திற்குப்பின்
## ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

| | |
|---|---|
| திரு. கனகசபை கந்தையா (2010 மார்ச், யூன், செப்ரெம்பர்) | $450.00 |
| அமரர் சின்னத்துரை சசிகாந்தன் நினைவாக (2010) | $200.00 |
| அமரர் வடிவேலு விவேகானந்தராசா நினைவாக (2011) | $300.00 |

**ஆத்மஜோதி பத்திரிகைக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416-724-6240**

# எங்குமுள்ள பிள்ளையார்

புளியங்கூடல்
இந்தன் முத்துவிநாயகர்

இல்லார்க்கும் உள்ளார்க்கும் இருப்ப வற்றை
இன்புடனே பகிர்ந்துண்ணும் இதயம் மிக்க
நல்லார்க்கும் அல்லார்க்கும் நாடு வாழ
நலிவற்ற உழைப்பாலே நன்மை செய்யும்
வல்லார்க்கும் நினைந்துருகி வாழ்த்து வார்க்கும்
வாழ்த்தாத வறியார்க்கும் தூற்று வார்க்கும்
எல்லார்க்கும் இறையான புளியன் கூடல்
இந்தன்முத்து விநாயகர்தாள் ஏத்து வாமே. (91)

வேலணை
மகா கணபதிப்பிள்ளையார்

சிந்தைக்குள் நின்றென்றும் தித்திக் கின்ற
செழுங்கனியே செந்தமிழே தேனே பாலே
வந்துள்ளேன் வேலணைமா பதியில் வைகும்
மகாகண பதிப்பிள்ளை யாரே வந்த(து)
எந்தற்கோ பிறருக்கோ வரத்துக் கன்றென்
னிதயத்தில் இருக்கின்ற நின்னைக் காண
வந்துள்ளேன் வற்றாத அன்பி னாலே
வாழ்வுற்ற பயன்பெற்றேன் வாழ்க மன்னே. (92)

மண்கும்பான் பிள்ளையார்

ஈசான முகத்தாரின் பிள்ளை யானார்
இணையிலா வதிகார வள்ள லானார்
பேசாத பெருமைகொள் மறையு மானார்
பீழைகள் நீக்குமோர் இறையு மானார்
பாசாங்கு சத்தானை முகத்த ரானார்
பரவிடும் அடியாரின் அகத்த ரானார்
மாசேது மில்லாத மக்கள் வாழும்
மண்கும்பான் பதிவைகும் பிள்ளை யாரே. (93)

# இறைவனைத் தியானிப்பவர்களுக்குத் துன்பம் இல்லை

ஞானசுரபி ஆத்மஜோதி நா. முத்தையா

திருஞான சம்பந்தர் திருக்காளத்திக்குச் செல்லும்போது, கண்ணப்பரின் திருப்பாதச் சுவடுகள் பதிந்த காட்டிலே நடக்கும் பேறுபெற்றோம், என்று மகிழ்ச்சியினால் உந்தப்பட்டவராய்ச் சென்றார். இதற்குத் தென்கயிலாயம் என்றொரு பெயரும் உண்டு. வடதிசைப் பதிகள் தமிழ் வழக்கற்றவைகளாதலால் இங்கிருந்தவாறே வடகயிலை, திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருப்பதம். இந்திரநீலப்பருப்பதம் முதலியவற்றை நினைந்து பாடினார். இராமேசுவரத்திலிருந்து திருக்கேதீச்சரத்தையும் கோணேஸ்வரத் தையும் எவ்வாறு பாடினாரோ அவ்வாறே இத்தலங்களையும் ஞானக்கண்ணாற் கண்டு பாடினார்.

பின்னர் ஒற்றியூர் வணங்க உள்ளங் கொண்டு காளத்தியைக் கைகூப்பி வணங்கிப்பாடிப் பிரிந்தார். திருவேற்காடு சென்றிறைஞ்சி திருவலிதாயம் சென்றார். திருவலிதாயம் இப்போ பாடி என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. பாரத்வாச மகரிஷி, வியாழ பகவான், அனுமான் ஆகியோர் வழிபட்டு முத்தி அடைந்ததாகத் தலபுராணம் கூறுகின்றது. சுவாமி பெயர் வலிதாய நாதர். அம்மை பெயர் தாயம்மை. இங்குள்ள கிணற்று நீர் மிகச் சுவையுள்ளது.

வலிதாயநாதரைத் தரிசிக்கச் சம்பந்தப் பெருமான் அடியார் கூட்டத்தோடு சென்றார். கோயிலிலேயும் மிகப் பெரிய அடியார் கூட்டத்தைக் கண்டார். எம்பெருமானைச் சேவிக்கத் தினந்தோறும் வரும் அடியார் கூட்டமும் சம்பந்தப் பெருமானைத்தரிசிக்க வந்த புத்தடியார் கூட்டமும் சம்பந்தப் பெருமானோடு உடன் வந்த பழம் பெரும் அடியார் கூட்டமும் ஒன்று சேர்ந்தபோது அங்குள்ளவர்கள் அடைந்த இன்பத்திற்கு ஓர் எல்லையில்லை. சம்பந்தப் பெருமானே அடியார் கூட்டத்தைக் கண்டு ஆனந்தம் மிகக் கொண்டார். அவரது ஆனந்தம் பதிகமாக உரு எடுத்தது.

பத்த ரோடுபல ரும்பொலியம்மல ரங்கைப்புனல் தூவி
ஒத்த சொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்தவுயர்சென்னி
மத்தம் வைத்தபெரு மான்பிரியாதுறை கின்றவலிதாயம்
சித்தம் வைத்தவடி யாரவர்மேலடை யாமற்றிடர் நோயே

பக்தர் என்பது தினமும் வந்து பூசிக்கும் அடியார்களையும் சம்பந்தப்பெருமானைத் தரிசிப்பதற்காக வந்த புத்தடியார்களையும் குறித்து நின்றது. பலர் என்பது சம்பந்தப்பெருமான் எங்கெங்கெல்லாம் செல்கின்றாரோ அங்கங்கெல்லாம் அவரைப் பிரியாது உடனுறையும் சிவனடியார்களைக் குறித்து நின்றது. இந்த அடியார்கள் பலராயினும் அவர்கள் எல்லாருடைய குறிக்கோளும் ஒன்றே. ஆண்டவனைப் பரவுதலும் அவனடி சேர்தலுமே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள். எல்லாரும் வணங்கும் முறையும் ஒன்றாகவே காணப்பட்டது. கோயிலுக்குச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லலாகாது என்று சொல்வார்கள். தமது அன்பைக் காட்டவும் மனத்தின் பரிசுத்தத் தன்மையைத் தெளியவைக்கவும் பூக்களைக் கையில் ஏந்திச் சென்று இறைவனுடைய பாதமலரிட்டு வணங்குதல் வழக்கம். பக்தன் மலரிட்டு வணங்கும்போது இதயத்தாமரையையும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்து விடுகின்றான்.

பூவிலே அர்க்கியம் செய்து ஜலத்தை மந்திரத்தோடு சொரிந்து இறைவனது திருப்பாத மலருக்காக்குகின்றார்கள். உள்ளங் கையிலே மலரைவைத்து அதனை உற்று நோக்கி மந்திரஜெபம் செய்து அம்மலரை இறைவனது திருப்பாதத்திற்காளாக்குதல் சாதனைகளில் ஒன்று. மந்திரஜெபத்தோடு சேர்ந்த இதயதாமரையை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றான் பக்தன். இறைவனும் நாமமும் ஒன்றே. மந்திர ஜெபம் செய்யும்போதே இதயதாமரையில் இறைவனை எழுந்தருளச் செய்து விடுகின்றான். அன்பாகிய நீரினால் ஆட்டுகின்றான். இதனையேதான் திருமூலப்பெருந்தகை "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்றார்.

இத்தனை அடியார்களும் ஒரே குரலில் வேதமந்திரங்களைச் சொல்லி ஏத்துகின்றார்கள். பூசை செய்யும் அந்தணர்கள் ஒரே குரலில் பக்தியோடு மந்திரங்களை உச்சரித்து வழிபாடு செய்யும்போது உலகத்தவர்களும் அவ்வோசையில் ஒன்றி இறைவனது திருப்பாதத்திற்கு ஆளாகின்றார்கள். சம்பந்தப்பெருமான் தமிழ் வேதத்தைப் பாட உடனிருந்த அடியார்களும் அவரோடு ஒத்திசையில் பாடி மனமுருகி நின்றார்கள். கேட்டுக் கொண்டு நின்றவர்களும் உள்ளத்தைப் பறிகொடுத்து நின்றார்கள். இதுவே கூட்டுவழிபாட்டின் தத்துவமுமாகும். வேத மந்திரங்களை உச்சரிக்கிறவர்களுடைய உள்ளத்திலே பக்தி பிறந்தால் அதனைக்கேட்டு வழிபடுகிறவர்களுடைய உள்ளத்திலேயும் பக்தி அரும்பும். சம்பந்தப்பெருமான் பக்தியோடு பதிகங்களைப் பாடினார். கேட்டு

நின்றோரும் பக்தியோடு பாடிப் பயன் பெற்றனர். கேட்டு நின்றோரும் பக்தி உள்ளம் படைத்த வரானார்கள். கூட்டுவழிபாடு நடத்துபவரும் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லித் தான் அனுபவித்துப் பாடும்போது அவரைப் பின்பற்றிப் பாடுபவரும் அனுபவத்தைப் பெறுகிறார்கள். அனுபவித்துப் பாடுகிறார்கள். கேட்டு நிற்பவரும் சொல்ல முடியாததொரு ஆனந்தத்தை அடைகின்றார்கள். இதனைச் சம்பந்தப் பெருமான்,

“ஒத்த சொல்லி யுலகத்தவர்தாந் தொழுதேத்த”

என்ற பகுதியால் குறிக்கின்றார்.

இப்படி அடியார்களால் வணங்கப்படும் பெருமான் தலையிலே ஊமத்தம் பூவை அணிந்திருக்கின்றான். ஊமத்தம் பூவை விரும்பி அணிந்திருக்கும் பெருமான் பக்தர்களுடைய அர்க்கியத்தோடு கூடிய மலர்களை மனமுவந்து பெற்றுக் கொள்வான் என்பது கருத்து. இத்தகைய பெருமான் வலிதாயம் என்ற திருத்தலத்தை நீங்காது உறைகின்றானாம். அடியவர்கள் எல்லாரும் இடைவிடாது வலிதாய நாதரை நினைவதால் அவரும் அங்கு இடைவிடாதுறைகின்றார் என்பது கருத்து.

மனம் தெளிந்த நிலையில் சித்தம் என்று பெயர் பெறுகிறது. அங்குதான் இறைவனைக் குடியிருத்த வேண்டும். ‘சித்தமிசை குடிகொண்ட அறிவான பர தெய்வமே’ என்பார் தாயுமானார். சித்தத்திலே இறைவனைத் தவிர வேறு எதை வைத்தாலும் அவற்றால் துன்பமேதான். இறைவனது திருப்பாதத்தைத் தமது சித்தத்திலே வைத்த அடியவர்களுக்கு எவ்வித துன்பமும் இல்லை என்பது கருத்து.

இப்பதிகத்திலுள்ள மற்றைய பாடல்களிலே வலிதாயத்தை அடையும் அடியார்களுக்கு வினை இல்லை என்றும், வலிதாயம் உலகப்பிணியைத் தீர்ப்பது; அதனை நினைத்தால் நும்பிணியும் தீரும்; இன்பமும்கை கூடும் என்றும், அடியார்களாகிய உங்களுக்கு வலிதாயத்தைப் பற்றி வாழ்வதே சரண் என்றும், மனபரிபாக விசேடம் கைவரப் பெறாத மந்தியும் கடுவனும்கூட வணங்கும்பொழுது, மனபரிபாகமடைந்த மக்கள் வழிபடாராயின் அவர்களது வினைதீர வழி இல்லை என்றும், வலிதாயத்தை தொழுதேத்துவதனால் ஞானம் உண்டாகின்றதென்றும், ஆன்மாக்கள் என்றும் அடையத்தகும் கதியாகிய வீட்டின்பத்தை, வலிதாயநாதனின் கழலை ஏத்துவதால் அடைந்து விடலாம் என்றும், வினைக்கீடாகிய உடலில் உயிர் உள்ள அளவும் தொழுவாரது மனத்துன்பம் மடியும் என்றும்,

வலிதாயத்தை வணங்குவோரையே பெரியோர் என உலகம் போற்றும் என்றும், யாதோர் வித்தியாசமும் இன்றி அடியார் எல்லார்க்கும் அருள் செய்யும் வலிதாயத்தைப் பேசுபவர்க்கு தாம் அடியார்கள் எனப் பெரியோர்கள் பேணிக்கொள்வார்கள் என்றும் கூறியுள்ளார் சம்பந்தப் பெருமான்.

வலிதாயச் செம்பொருளை நாமும் வணங்கி உய்வோமாக.

"வருவேற்று மனத்தவுணர் புரங்கள் செற்றார்
வலிதாயம் வந்தெய்தி வணங்கிப் போற்றி"

என்ற சேக்கிழார் பெருமானின் கூற்றை ஆழ்ந்து சிந்திப்போமாக.

---

நம்மால் பெரிய காரியங்களைச் செய்ய இயலாவிடினும் செய்யும் சிறிய காரியங்களை அன்புடனும் ஆர்வத்துடனும் செய்யலாம்.

- அன்னை திரேசா


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# நாங்கள் சைவசமயத்தவரா வேற்று மதத்தினரா? சிந்திப்போம்

பேரறிஞர் முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

சினிமாவிலே ஒரு பாடல். ஆண்டவனே உன்னைச் சந்திக்க வேண்டும். நான் செய்தபாவம் என்னவென்று சிந்திக்க வேண்டும் என வருந்திச் சிந்திப்பவன் மனிதன், சிந்தனாவாதி மனிதன். ஆனால் அவன் மனம் போன போக்கிலே போய்ச் சாயம் வெளுக்கிறான். மனித சாயம் போய்விட்டால் அவனுக்கு மதிப்பும் இல்லை, மரியாதையும் இல்லை. மானம் எல்லாம் இழந்த பின் வாழ்வதும் ஒரு வாழ்வாமோ. நமக்கு மொழியுரிமை, இன உரிமை, ஏன் சமய உரிமை பிறப்பினால் வந்தது. இப்பிறப்புரிமையில் மதம், இனம், மொழி, பிறந்த மண் உயர்வானவை. நம் மேலங்கியை மாற்றுவதுபோல, நாம் குணம் நடையுடையை விருப்பப்படி மாற்றுவது போன்று மொழியை இனத்தை, சமயத்தை மாற்றலாமா. அவை நம் பிறப்புரிமைகள் மட்டுமல்ல பிறப்புடைமையுமாம். நாம் தமிழ் இனத்தவர், நம் மொழி தமிழேதான். நம் சமயம் நிட்சயமாய்ச் சைவமேதான். இவற்றை இழக்கக்கூடாதென எழுந்ததுதான் உரிமைப்போர். இந்நோக்கில் நாட்டைவிட்டு வெளியேறியோரிற் சிலவீதமானவர்கள். மொழியை ஓரம் கட்டினார்கள். உடையையும் தேவைநோக்கி மாற்றினார்கள். நிறத்தை மாற்ற முடியவில்லை. இவர்களை வெள்ளைநிறத்தவர் கறுப்பர், ஏசியர் என்ற வரிசையில் தான் வைத்திருக்கிறார்கள். நம்மவரிற்பலர் கிறீத்தவமதத்திற் சேர்ந்த பின்னரும் கறுப்பர் கறுப்பர்தான். ஏனைக்கிறீத்தவர் இவர்களோடு கைகோப்பது மெத்தக் குறைவு. உறவுமுறைகள் தமிழர் தமிழரோடுதான். விவாகம் என்று வந்துவிட்டால் தம் இரத்த உறவு உறவுதான் சைவசமயிகளும் சைவத்தினின்று வேற்று மதம் புக்கோரும் தமிழர்களாய் அமையினும் சகோதரத்துவமாகவே நேசம் பாராட்டுவர். எனவே பேதம், பகைமை பாராட்டாமல் வாழும் நெறி சைவ நெறி, சமரசநோக்கம், சம்மத நோக்கு நம்மிடம் உண்டு. நம்மைச் சைவர்களென்று கணிப்பரேயன்றி நம் சமரசத்தை இசுலாமோ, கிறீத்தவமோ, பௌத்தமோ ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களிற் கிறீத்தவர் கிறீத்தவர்தான், இசுலாமியர் இறுக்கமான இஸ்லாமியர்தான். சாக்கியர்-பௌத்தர் பௌத்தர் தான். சைவசமயிகள் தான் தம்மை விற்பவர்கள், விற்றவர்கள். இவர்கள் தான் கிறீத்தவர்களானவர்கள். அசல் சைவர்களை இவர்கள் மூலம் மதமாற்றம் செய்ய முயல்கிறார்கள். ஆதிமுதல் இத்தேதி வரையும் சைவசமயிகளாய் வாழ்ந்தாலும், ஒரு கிறீத்தவர், ஒரு இசுலாமியர்,

ஒரு பௌத்தர் இடம் இல்லாத பெலவீனம் இந்த இந்து மதத்தவர் இடம், சைவசமயிகள் இடம் இருக்கவேதான் இருக்கிறது. அதுவே கிறீத்தவச்சாயம் பூசுதல். அண்மைக்காலங்களிலே நம் சமுதாய மண்ணிலே மருந்துக்கும் அவமானத்துக்கேனும் இல்லாத சில அம்சங்கள் நமக்குள்ளே ஊடுருவித் தலைவிரித்து ஆடக் காணலாம். சாப்பாட்டுக்கடை ஒன்றின் விளம்பரம் ஊடகத்தில் இப்படி ஒலிக்கிறது. இறால், நண்டு, கணவாய், கோழி, ஆடு, மாடு பன்றி இவற்றுடன் கடல் உணவுகளும் இங்கே கிடைக்கும்.

பத்துவித மரக்கறிச் சாப்பாட்டுடன் மணம் குணமான வாழை இலைச்சாப்பாடு, வடை பாயசம், தயிர், ரசத்துடன் கந்தசஷ்டி விநாயகர் விரதம், ஆடிஅமாவாசை, சித்திராபூரணை, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத்திங்கள் விரதச் சாப்பாடு இங்கே பெற்றுக் கொள்ளலாம். சைவசமயியின் வீட்டிலே விரதச் சாப்பாடு சமைக்கும் பாத்திரங்கள் தனியாய் இருக்கும் கத்திகூட வேறானது.

இவ்விளம்பரப்படி விரதச்சாப்பாடு சுத்த போசனமாய் அமையுமா, இதைப் பெற்று உண்பவர்களும் மாடு உண்பவர்களும் எம்மதமும் சம்மதம் என்பவர்களாய் இருக்கலாம் அல்லவா. சுத்த சைவர் தம் பழைய புனிதத்தை வழுவவிடமாட்டார்கள். அவர்கள் தான் சனாதன சைவத்தைப் பேணுபவர்களாம். இதே போன்று இன்னோர் வெறுக்கத்தக்க அம்சம் சைவமக்களிடம் புகுந்திருக்கிறது. கிறீத்தவ புத்தாண்டு, நத்தார்தினம் டிசம்பர் 31ஆம் தேதி இந்து ஆலயங்களைத்திறந்து வைத்திருப்பதும், அதை நடைமுறைப்படுத்த வழிசமைப்பதுமாகும். இத்தினங்கள் கிறீத்தவத்துடன் தொடர்பு டையன. இதற்கும் சைவசமயத்துக்கும் எவ்வித தொடர்புமே இல்லை. இவ்வாறிருக்கச் சைவசமயிகள் இதைக் கொண்டாடுதல் நம் சமயத்துக்கு எதிரான நடைமுறையாகும். இதற்குச் சைவாலயங்கள் ஒத்தாசைபுரிவதும் அந்தணர் அதற்கு வரவேற்பு அளிப்பதும் சமயவிரோதம் ஆம். அசல் சைவர் இதை விரும்புவதே இல்லை, வெறுப்பர். இவர்கள் தேவாலயம் போய் திருப்பலிப் பூசையிற் கலந்து கொள்ளலாமே. பத்திரிகைகளிலும் ரேடியோக்களிலும் தொலைக்காட்சிகளிலும் இவை விளம்பரப்படுத்துவது ஏன் இதுவும் சைவமரபை இகழும் நடைமுறையாகும். இனிவரும் காலங்களில் சித்திரைப் புத்தாண்டுக்குப் பதிலாக ஈஸ்டர் கொண்டாடப்படலாம்.

நமது புத்தாண்டை, தைப்பொங்கலை அவர்கள் கொண்டாடியதுண்டா ஏன் சைவமக்கள் சில சிங்களச் சகோதரர் எம்போற் கொண்டாடும் புத்தாண்டைப் போற்றியதுண்டா. இன்னும் ஒருபடிமேலே போனால் இஸ்லாமியரின் ஹிஜரத் புத்தாண்டை

நாம் போற்றுகிறோமா இல்லை. எனவே இந்நிகழ்வு சைவர் மேற்பூசப்பட்ட கிறீத்தவசாயம் தான். இதைப் போன்ற இன்னோர் சம்பவம்.


பிறந்ததின வாழ்த்துப் போன்று நத்தார் வாழ்த்து (December 25) புத்தாண்டு வாழ்த்து (January 1) சைவ, இந்து சமயத்தவர்களின் நாவினின்று உதிர்வது, ஒரு கிறீத்தவ நண்பருக்கு, சைவசமயி கூறுவதே பொருத்தமில்லை என்றாலும் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஒரு சைவசமயி ஒருவர் சைவசமயி ஒருவருக்கு தொலைபேசியிலும் சைவசமுதாயத்துக்கு தொலைத் தொடர்புசாதனம் மூலம் சொல்வதும் சைவசமயத்துக்கும் அது சார்ந்த சமுதாயத்துக்கும் செய்யும் துரோகமும் இழுக்குமாம். வேறெந்த மதத்தவரும் இதைப்போல நம் கொண்டாட்டங்களைத் தமதாக்குவார்களா. சைவசமயிகள் மட்டும் கிறீத்தவ பாரம்பரியங்களை மேற்கொள்வதேன். இதை ஒவ்வொரு சைவசமயியும் சிந்திக்க வேண்டியவர்களே. பூசகர்கள்கூட இதை மேற்கொண்டால் சமயமேது நமக்கென்றோர் சமயம் ஏன். இதேபோல இன்னோர் இமாலயத்தவறைச் சைவசமுதாயம் முன்னெடுத்துச் செல்கிறது. இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் கோயிலிலேதான் அவன் இருக்கிறான் என்று அங்கே போகின்றோம். இவ்வண்ணமேலீடுகளிற் படங்களைவைத்து வழிபடுகிறோம். படங்கள் தெய்வத்திருமேனிகளே. பல்வேறு விதமான (முருகன் சிவன்-சக்தி-கண்ணன்-காயத்திரி, சாஸ்தா) தெய்வப்படங்களுடன் கலண்டர்களை ஆயிரம் ஆயிரமாய் அடித்து ஆலய கர்த்தாக்களும் கிரியா பீடங்களும், திருமணத்தரகர்களும், சோதிடர்களும், வர்த்தகர்களும் காப்புறுதித்தரகர்களும் மக்களிடம் பரப்புகின்றனர். ஆலயங்கள் யாருடைய பணத்திலே இதை அச்சேற்றி விநியோகிக்கின்றன. பொதுமக்களின் பணம் இப்படி வீண்விரயமாவதை எப்படி ஏற்றுக் கொள்வது. இப்படங்கள் குப்பை பெட்டிகளைச் சேர்வதே இறுதிநிலை. இதை எந்த அசல் சைவசமயியும் விரும்பமாட்டான். இந்நிலை நிறுத்தப்படல் வேண்டும். உண்மையான சைவசமயிகளே சிந்தித்து உங்களை வழிநடத்துங்கள். இவ் அநியாயம் இனியும் நிகழாமல் பாதுகாருங்கள். நாம் சைவசமயிகள். எமது சமயம் சைவமேதான்.

இன்றியமையாச் சிறப்பின் ஆயினும்
குன்ற வருப விடல்

குறள் 96

# திவ்ய ஜீவன சங்கத்து சுவாமிகள் ஓங்காரானந்தாவின் தரிசனம்

சு, சிவதாஸ்
முன்னாள் ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி யாழ்ப்பாணம்



ஈழத்து மட்டுநகரில் அமைந்திருக்கும் திவ்ய ஜீவன சங்கத்தின் (Divine life Society) ஆசிரமத்திற்கு பொறுப்பாளராகவும் கல்லடிக் கடற்கரையில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்து தபோவனத்திற்கும் பொறுப்பாளராகவும் (1965 தொடக்கம் 1985 வரையிலாவது) இருந்த சுத்த மெய்த்துறவி சுவாமி ஓங்காரானந்தா அவர்களின் நினைவு பற்றியது இந்தக் கட்டுரையாகும்.

கல்லோயா அபிவிருத்திச் சபையில் இலிகிதராகக் கடமையாற்றிய இவர் 1956இல் அப்பதவியைத் துறந்து, 1965இல் இந்திய திருத்தல யாத்திரை செய்து ரிஷிகேசத்து சுவாமி சிவானந்தர் மூலமாகச் சந்நியாச தீட்சை பெற்று மட்டக்களப்பில் பெருந்துறவியாக இருந்து வாழ்ந்தார். இவர் கல்லடி கடற்கரையில் தபோவனம் அமைத்து, அதற்கு 'ஆனந்தக் குடில்' எனும் நாமமும் இட்டு, பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கு தாயாயும் தந்தையாயும் இருந்து தமது ஆத்மிக பயணத்தை மேற்கொண்டார். 1973ஆம் ஆண்டு அடியேன் அவருடைய தபோவனத்தில் ஒரு வாரகாலமாக தங்கியிருந்தேன். தபோவனமோ பெரும்பகுதி ஓலையால் வேயப்பட்ட கொட்டகையாகவே இருந்தது. கூப்பிடு தூரத்தில் கடற்கரையிருந்ததால் மெல்லென வீசும் காற்று தபோவனத்திற்கு மெருகூட்டியது. அங்குள்ள பிள்ளைகளுக்கு வழங்கப்படும் சாப்பாடு பெரும்பாலும் இலைகுழைகள் இட்ட குத்தரிசிக் கஞ்சியாகவே இருந்தது. இறைவழிபாட்டுக்கு அற்புதமான ஓர் இடமாகவே காணப்பட்டது. தபோவனத்து செலவுகளுக்காக பூச்சாடிகளை தனது கையால் செய்து, சந்தைகளில் விற்றுக் காசாக்கினார். ஆடம்பரமேதும் அற்ற காவி வேட்டியும் காவிச் சால்வையும் நெற்றியிலே அணிந்த திருநீறும் சுவாமியின் ஆன்மீகத் துறவைப் பறைசாற்றியது.

தனது கனவிலே திருச்செந்தூர் முருகன் தோன்றி, தபோவனத்துக்கு அண்மையில் உள்ள பனைமரம் ஒன்றின் நிழலில்

தான் வருடாவருடம் கதிர்காமம் செல்லும் வழியில் ஓயவெடுப்பதாகக் கூறியதிலிருந்து திருச்செந்தூர் முருகனுக்கு ஓர் ஆலயமும் இவர் அமைத்தார். கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயம், கவியோகி சுத்தானந்த பாரதியாரால் துவக்கி வைக்கப்பட்டதும் இங்கு நினைவுகூரத்தக்கது. இன்றும் ஈழத்தின் பல திக்குகளிலிருந்தும் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களுக்கு ஒரு இடைக்கால தரிப்பிடமாக இவ்வாலயம் விளங்குகின்றது. முதலில் குடிசையாக அமைக்கப்பட்ட ஆலயம் 1978இல் ஏற்பட்ட சூறாவளியால் பாதிக்கப்பட்டதன் காரணமாக 1980ஆம் ஆண்டு கல்லால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. கட்டிட வேலை இடம்பெற்ற காலங்களில் முருகன் பல அற்புதங்களை நிகழ்வித்து, சுவாமிகளை ஊக்குவித்தார்.

சுவாமிகளை மீண்டும் ஒருமுறை அடியேன் சந்திக்க ஏற்பட்ட சம்பவத்தைக் கூறுகின்றேன். நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் சப்பரத் திருவிழாவன்று யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில் உள்ள பக்தர்கள், நயினை நாகபூசணி அம்மனுக்கு காலையிலே அபிடேக பூசை செய்து பாதயாத்திரையாக பஜனை பாடியபடி நல்லூர் முருகன் தேரிலே ஆரோகணிக்கும் நேரத்துக்கு முன்பதாக வந்து சேர்ந்து விடுவார்கள். நயினை அம்மன் வாசலில் இருந்து பஜனையுடன் ஆரம்பிக்கும் இக்கூட்டம், கடலை கடக்கும் வள்ளத்திலும் பஜனை செய்து இப்பால் தரையிறங்கி கால்நடையாக வந்து நல்லூர் தேரின் பின்னால் சுற்றி வந்து யாத்திரையை முடித்துக் கொள்வார்கள். அடியேனும் 1975ஆம் ஆண்டென நினைக்கிறேன் இந்த பாதயாத்திரையிலே முழுமையாகப் பங்கு கொண்டேன். இந்த யாத்திரைக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து சந்நியாசிகள் வருகை தருவார்கள். இதில் சுவாமி ஓங்காரானந்தாவும் பங்குகொண்டு சிறப்பித்திருந்தார்கள். இந்தப்புனித யாத்திரையை முன்னின்று ஒழுங்கு செய்பவராக புங்குடுதீவு நமசிவாய தேசிகர் காணப்பட்டார். இந்த யாத்திரை தொடங்குவதற்கு உந்து சக்தியாகவும் வழிகாட்டியாகவும் ஆத்மீக வள்ளல் நா. முத்தையா அவர்களும் திகழ்ந்தார்.

சுவாமியின் எளிமையே அவரது ஆன்மீக எழுச்சியை வெளிப்படையாகக் காட்டியது. நல்லூர் வாசலிலே வைத்து, அடியேன் சுவாமிகளுக்கு நான் கண்ட முருகன் கனவுகளைச் சொன்னேன். அப்போது, அவர் "இது எல்லாம் ஆரம்பப் படிகள் இதனையும் கடந்து, மனதிலே துறவு பூணுதலே உயர்வாகும்" என்று மொழிந்தார்.

துறவு என்பது இறைவன் மேல் நாம் கொள்ளும் உறவாகும்.

இறைவனின் உறவே, உலகின் துறவாகும். எல்லா ஜீவராசிகளிலும் அடிநாதமாய் இருப்பது அப்பரம்பொருளே என்று நாம் உய்த்துணர்ந்து அனுபவமாக்கிக் கொள்ள வேண்டும். இன்னும் சரியாகச் சொன்னால் இப்பிரபஞ்சம் முழுவதற்கும் ஆதாரமாய் இருக்கும் சக்தியே இறைவனாகும். நாமும் அச்சக்தியின் அம்சமாகவே இருக்கின்றோம்.

சுவாமிகளின் பிற்கால வாழ்க்கை எப்படி அமைந்தது என்பது அடியேனுக்கு மறைபொருளாகவே இருக்கின்றது என்று சொல்லி இக்கட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

---

## ஞானிகளின் அமுத மொழிகள்

எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால் துன்பமும் இல்லை கவலையும் இல்லை

உணர்ச்சி அரியணையில் அமர்ந்திருக்கும் போது அறிவு வெளியே போய்விடும்.

ஏதாவது வேலை செய்துகொண்டே இருக்கவேண்டும். சோம்பலான மனதை எண்ணங்கள் அலைக்கழிக்கும்.

பண ஆசை கொண்டு அலையும் லோபியைப் போல உன் மனம் இறைவன் மீது ஆசைகொண்டு அலையட்டும்


**வீடு, வியாபாரநிலையம் வாங்க விற்க**

**Kenga Kumaraswamy**

***Sales Representative***

**Cell: 416-318-0171**

*kengak@hotmail.com*



**HomeLife / Future Realty Inc.**, Brokerage*

7 Eastvale Drive, Suit #205

Markham, ON. L3S 4N8


**Bus: 905-201-9977** **Fax: 905-201-9229**

*Independently owned and operated

# திருத்தல யாத்திரை 2010

சிவ முத்துலிங்கம்

கனடா இந்து சமயப் பேரவையின் திருக்கூட்டத்தினர் கடந்த 2003, 2005, 2007, 2010 ஆகிய ஆண்டுகளில் இந்தியத் திருத்தல யாத்திரையை மேற்கொண்டுள்ளனர். 2003 இலும் 2005இலும் மணிவாசகப் பெருமான் கால் பதித்துத் திருவாசகம் பாடிய தலங்களான திருப்பெருந்துறை, சிதம்பரம், உத்தரகோசமங்கை, திருஅண்ணாமலை போன்ற தலங்களில் திருவாசகம் முற்றோதினர். மணிவாசகப் பெருமான்பிறந்த கிராமமான திருவாதவூர் சிவன் ஆலயத்திலும் திருவாசகம் முற்றோதியிருந்தனர்.



2005 திருத்தல யாத்திரைக் குழுவினர்

நான்கு முறை சென்ற திருத்தல யாத்திரையின் பொழுது காசிவிசுவநாதப் பெருமானைத் தரிசனம் செய்யவும் தவறுவதில்லை. 2005ஆம் ஆண்டு குமரகுருபர சுவாமிகளினால் காசியிலே நிறுவப்பட்ட குமாரசாமி மடத்திலும் திருவாசகம் முற்றோதும் பெரும் பாக்கியத்தைத் திருக்கூட்டத்தினர் பெற்றனர். 2007, 2010ஆம் ஆண்டுகளில் பன்னிரு திருமுறைகளையும் திருமுறை பாடிய அருளாளர்கள் கால் பதித்துத்திருமுறை பாடிய ஆலயங்களில் திருமுறை முற்றோதும் பெரும் பாக்கியத்தைப் திருக்கூட்டத்தினர் பெற்றனர்.

2007ஆம் ஆண்டு முதலாம்திருமுறையை திருஞானசம்பந்தர், சிவபெருமான் உமாதேவியார் சகிதம் தரிசனம்பெற்று திருமுலைப்பால் அருந்திய சீர்காழியம்பதியில் திருக்கூட்டத்தினர் முற்றோதினர். மூன்றாம் திருமுறையை சம்பந்தப் பெருமான் தன் திருமணத்திற்கு வருகை தந்த உற்றார், உறவினர் அன்பர்களுடன் சிவஒளியில்

கலந்த ஆச்சாள்புர ஆலயத்தில் முற்றோதினர். நாலாம் திருமுறையை அப்பர் பெருமானைத் தடுத்தாட்கொண்டு சூலை நோய் நீக்கிய திருவதிகை வீரட்டானத்திலும் ஏழாம்திருமுறையை சுந்தரமூர்த்தி சுவாமிகளை தடுத்தாட்கொண்ட திருவெண்ணெய் நல்லூரிலும் முற்றோதினர். எட்டாம்திருமுறையான திருவாசகத்தை மணிவாசகப் பெருமான் திருவடி தீட்சை பெற்ற திருப்பெருந்துறையிலும் ஒன்பதாம் திருமுறையை கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடிய தஞ்சைப் பெரிய கோயிலிலும் பத்தாம் திருமுறையை திருமூலர் திருமந்திரத்தை இயற்றிய திருவாவடுதுறையிலும் பதினோராம் திருமுறையை நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்த திருநாரையூர் ஆலயத்திலும் பன்னிரண்டாம் திருமுறையை சிதம்பர நடராஜர் ஆலயத்தில் சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் இயற்றிய ஆயிரம் கால் மண்டபத்திலும் முற்றோதினர்.




திருமுறை முற்றோதல் பூர்த்தி அடைந்த பின்னர் கனடா இந்துசமயப் பேரவையினர் இருநாட்கள் பெரியபுராண விழாவை சிதம்பரம் ஆயிரம்கால் மண்டபத்தில் நடத்தினர். திருமுறையுடன் திருமுறைச் செல்வர் சிவநெறிக்காவலர் சிவ.முத்துலிங்கம் அவர்கள் யானை மீது ஏறி மாடவீதியை பவனி வர திருமுறை முற்றோதிய அடியார்கள் திருமுறையைச் சுமந்த வண்ணம் யானையைப் பின்

தொடர்ந்து பல பக்தர்கள் புடைசூழ மேள, தாள, நாட்டிய நிகழ்ச்சிகளுடன் திருமுறை ஓதுவார்கள் பண்ணிசை படிக்க வலம் வந்தனர். மேற்படி பெரியபுராண விழாவில் பல சைவப் பேரறிஞர்கள், மடாதிபதிகள் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.



**2011 ஜனவரி 4ஆம் திகதி முதுபெரும் புலவர், திருமுறைக் கலைஞர் திரு. ச. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் நந்திகொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கிறார்**

2010ஆம் ஆண்டு திருத்தல யாத்திரையை டிசம்பர் 5ஆம் திகதி தொடக்கம் 2011 ஜனவரி 23 வரை திருக்கூட்டத்தினர் மேற்கொண்டனர். டிசம்பர் 5ஆம்திகதி 2010 கனடாவில் இருந்து புறப்பட்ட திருக்கூட்டத்தினர் 07-12-2010 அன்று காலை மூன்று மணிக்குச் சென்னை விமானநிலையத்தைச் சென்றடைந்தனர். அன்றுமாலையே சிதம்பரத்தை நோக்கிப் புறப்பட்ட திருக்கூட்டத்தினர் சிதம்பரம் புண்ணியநாச்சியார் மடத்தில் தங்கினர். மறுநாள் 8ஆம் திகதி காலை ஆறுமணிக்குச் சிதம்பர நடராஜப் பெருமானைத்தரிசனம் செய்தபின்னர் சம்பந்தப்பெருமான் முதலாம் திருமுறை பாடிய தலங்களில் ஒன்றான பல்லவனீச்சர ஆலயத்திற்குச் சென்றனர். சங்க இலக்கிய காலத்தில் காவிரிப்பூம்பட்டணம் என்று அழைக் கப்பட்ட இடத்தில் இவ்ஆலயம் அமைந்துள்ளது. காவிரிப்பூம் பட்டணம் இன்று பூம்புகார் என்று வழங்குகின்றது. பட்டினத்தார்,

இயற்பகைநாயனார் ஆகியோர் அவதாரம் செய்த பூமி. கண்ணகி, கோவலன் ஆகியோர் வாழ்ந்த பதி. சிலப்பதிகார காப்பியம் தொடங்கியது இத்தலத்தில் தான். இத்தலத்தில் திருக்கூட்டத்தினர் முதலாம்திருமுறையை முற்றோத ஆரம்பித்தனர்.



2010 திருத்தல யாத்திரைக் குழுவினருடன் இந்தியப் பேராளர்களும் சிலர்

திருமுறை முற்றோதலை திருமுறைக்கலைஞர் வித்துவான் ச. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் தீபாராதனை செய்து ஆரம்ப உரையை நிகழ்த்தி ஆரம்பித்து வைத்தார். பேரவையின் திருக்கூட்டத்தினருடன் சிதம்பர மாவட்டத்தைச் சேர்ந்த சைவப் பெரியார்களும் திருமுறை ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். முதலாம் திருமுறைத் தொடர் பதிகங்களை மறுநாட்காலை 09-12-2010 திருக்கண்ணார் கோயிலில் முற்றோதினர். திருக்கண்ணார் கோயில் சோழ நாட்டில் குறுமானக்குடி என்ற இடத்தில் உள்ளது. திருக்கண்ணார் கோயில் இறைவனைக் கண்ணாயிரமுடையார், கண்ணாயிரநாதர் என்றும் அழைக்கின்றனர். சம்பந்தரின் முதலாம் திருமுறைப் பதிகம் இவ்ஆல்யத்திலும் பாடப்பெற்றது. முதலாம் திருமுறையை இவ்ஆலயத்திலே பூர்த்திசெய்த திருக்கூட்டத்தினர் முதலாம்திருமுறையைப் பூர்த்தி செய்தமைக்காக திருக்கண்ணாயிரநாதப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டனர்.

இரண்டாம் திருமுறையை 10-12-2010ல் மேலைக் கடம்பூர் திருத்தலத்தில் முற்றோதினர். திருக்கடம்பூர் என்ற பெயர் கொண்ட இத்தலம் மக்கள் பேச்சு வழக்கில் மேலைக் கடம்பூர் என்று அழைக்கப்படுகிறது. கடம்பு என்ற மரம் தலமரமாதலால் கடம்பூர் என்றாயிற்று. இங்குள்ள இறைவனின் பெயர் அமுதகடேஸ்வரர். சம்பந்தரின் இரண்டாம்திருமுறையில் அறுபத்தெட்டாவது பதிகம் இத்தலப்பதிகமாகும். அப்பர் பெருமானாலும் பாடப் பெற்ற இத்தலம்

அவருடைய ஐந்தாம் திருமுறையில் இரண்டு பதிகங்களைக் கொண்டுள்ளது. சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர் ஆகியோரின் பாடல்களிலும் இத்தலம் குறிப்பிடப்படுகின்றது.

11-12-2010 அன்று இரண்டாம் திருமுறைத் தொடரை திருமுல்லை வாயில் ஆலயத்தில் முற்றோதினர். சோழநாட்டு வடகரைத்தலமாகிய இவ்ஆலயம் தென்திருமுல்லைவாயில் என அழைக்கப்படுகிறது. வடதிருமுல்லைவாயில் சென்னைக்குப் பக்கத்தில் உள்ளது. தென்திருமுல்லைவாயிலாகிய இத்தலம் கடற்கரை ஓரத்தில் உள்ளது. சோழ மன்னனின் பிரம்மசத்தி தோசம் நீக்கிய தலம். சோழ மன்னனின் குதிரையின் கால்கள் முல்லைக்கொடியைச் சுற்றிக் கொள்ள முல்லைக் கொடியை மன்னன் வெட்டியபொழுது இரத்தம் சிதறியது. தோண்டிப் பார்க்கையில் சிவலிங்கம் வெளிப்பட்டது. மன்னன் தன் தவறை உணர்ந்து தன் கழுத்தை அறுக்க முயலுகையில் இறைவன் இடப வாகனத்தில் காட்சி தந்ததாக தலவரலாறு கூறுகிறது. இன்றும் இவ்வாலயத்தில் சிவலிங்கத் திருமேனியின் பாணத்தில் இரு வெட்டுத் தழும்புகள் உள்ளன. இறைவன் முல்லை வனேஸ்வரர், முல்லை வனநாதர் என்று அழைக்கப்படுகின்றார். சம்பந்தரின் இரண்டாம் திருமுறையில் இத்தலப் பதிகம் இடம்பெறுகிறது. தருமை ஆதீனம் இத்திருத்தலத்தைப் பரிபாலிக்கிறது.

திருக்குருகாவூர் ஆலயத்தில் 12-12-2010 அன்று மூன்றாம் திருமுறையை முற்றோதினர். திருக்குருகாவூர் என்ற இத்தலம் சோழ நாட்டு வடகரையில் அமைந்துள்ளது. மக்கள் பேச்சுவழக்கில் இத்தலம் திருக்கடாவூர் என்று அழைக்கப்படுகிறது. இறைவன் வெள்ளடை ஈசுவரர், வெள்ளடைநாதர் என்று அழைக்கப்படுகிறார். சம்பந்தரின் மூன்றாம் திருமுறையில் இத்தலப் பதிகம் இடம்பெறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடல் பெற்ற தலமாகும். பசியோடிருந்த சுந்தரருக்கு இறைவன் கட்டமுதும், நீரும் தந்தருளிய தலமாகும். இத்தலம் மயிலாடுதுறையில் நாகபட்டணம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

- தொடரும்

---

## ஞானிகளின் உபதேசம்

வெளிச்சம் வேண்டுமானால் வெப்பத்தையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இறைவன் உனக்குக் கொடுத்துள்ள சக்தியை சரிவரப் பயன்படுத்தாவிட்டால் மேலும் அவர் சக்தியை வழங்கமாட்டார்.

# தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்

சிவ. முத்துலிங்கம்

தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் கோயம்புத்தூர் மாவட்டத்திலே பிறந்தவர். அன்னதானப் பணியை ஐம்பது வருடங்களாக பல சிரமங்களிற்கு மத்தியில் செய்து வருவது போற்றுதற்குரியது. இவர் இராமலிங்க வள்ளலார் சர்வதேச தருமபரிபாலன அறக்கட்டளை அமைத்து அதனூடாக பல அறப்பணிகளைச் செய்து வருகின்றார். இந்த அறநிலையம் அரசின் உதவி பெறாத தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். கடலூர் மாவட்டத்தில் மேட்டுக்குப்பம் என்ற கிராமத்தில் போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத பகுதியில் இந்த அறநிலையம் அமைந்துள்ளது. அநாதரவான சிறார்கள் எழுபது பேர் இவருடைய அறநிலையத்தில் தங்கியுள்ளார்கள். அவர்கள் யாவரும் கல்வி கற்கும் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் ஆதரவு அற்ற முதியவர்கள் முப்பத்தைந்து பேரும் தங்கியுள்ளனர்.



அறநிலையத்தில் தங்கியுள்ளவர்களைவிட பல ஏழைகள் தினமும் அங்கே வந்து உணவருந்துகிறார்கள். இவ் அறநிலையத்தை 1989 தொடக்கம் சுவாமிகள் நடத்தி வருகின்றார். தவத்திரு சுவாமிகள் அவர்கள் 2003 ஆம் ஆண்டு சாலை விபத்து ஒன்றில் அகப்பட்டு இடுப்புக்குக் கீழ் இயக்க நிலையில் படுக்கையிலும், சக்கர நாற்காலியிலும் தன் காலத்தைக் கழிக்கிறார். அப்படியிருந்தும் அன்பர்கள், தொண்டர்களின் உதவியுடன் அறநிலையத்தைப் போற்றிப் பாதுகாப்பதுடன் பத்திற்கும் மேற்பட்ட பிரபல தலங்களில் நடைபெறும் திருவிழாக்காலங்களில் அன்னதானப் பணியைச் செய்துவருகின்றார். காலை ஒன்பது மணி தொடக்கம் இரவு பத்து மணிவரை பசித்து வரும் அன்பர்களுக்கு இடைவிடாது அன்னம் அளித்து பசி ஆற்றுவதை கனடா இந்து சமயப் பேரவைத் திருக்கூட்டத்தினர் 2010 ஆம் ஆண்டு திருத்தல யாத்திரை சென்றபொழுது சிதம்பர நடராஜப் பெருமானின் ஆருத்திரா தரிசனத்தின் பொழுது கண்டு அதிசயித்தனர்.

தவத்திரு சுவாமிகள் அவர்கள் படுக்கையில் படுத்தபடி

தங்கள் அன்னதான மடத்திற்கு வரும் பக்தர்களுக்கும், அன்பர் களுக்கும் ஆசிவழங்குவதை திருக்கூட்ட அடியார்கள் கண்குளிரக் கண்டனர். தவத்திரு சுவாமிகளின் தன்னலமற்ற பணிகளைக் கண்ட திருக்கூட்டத்தினர் கண்கலங்கி அழுதபடி சுவாமிகளிடம் ஆசி பெற்றனர்.

ஆதரவற்ற ஒரு தாய் ஒரு பெண் குழந்தையைப் பெற்றவுடன் இறைவனடி சேர்ந்துவிட்டார். பிறந்து ஒரு கிழமைக்குள் அக்குழந்தையை தன் பொறுப்பில் பொறுப்பேற்ற தவத்திரு சுவாமிகள் கண்ணும் கருத்துமாக வளர்த்துவருகின்றார். சுவாமிகள் அக்குழந்தைக்கு அப்பர் பெருமானின் தாயாரின் பெயரான "மாதினியார்" என்ற பெயரைச் சூட்டி வளர்த்து வருகின்றார். தற்பொழுது மூன்று வயதான அக்குழந்தை சுவாமி சுவாமி என்று சுவாமிகளையே எந்நேரமும் சுற்றி வருவதை திருத்தல யாத்திரைக்குச் சென்றிருந்த நாம் கண்ணுற்றோம். சுவாமிகள் இயலாத நிலையில் கட்டிலில் படுத்துக் கொண்டு பக்தர்களுடன் உரையாடும்போது அககுழந்தை சுவாமிகளையே கட்டிப் பிடித்தபடி படுத்திருப்பதை நாங்கள் கண்டு அதிசயித்தோம்.

தன்னலமற்ற அறநிலையமான சுவாமிகளின் நிறுவனத்திற்கு உலகளாவிய ரீதியில் வாழும் சைவத்தமிழ் மக்கள் வாரி வழங்க வேண்டும் என ஆத்மஜோதி ஆசிரியர் குழு பேரன்புடன் வேண்டுகின்றது. 04-01-2011 செவ்வாய்கிழமை முழுநாள் நிகழ்ச்சியாக திருமுறைச் சைவமாநாடு கனடா இந்து சமயப் பேரவையினால் பூலோக கைலாயம் எனப்படும் சிதம்பரத்தில் நடத்தப்பெற்றது. இத்திருமுறை மாநாட்டுக்குத் தன் இயலாத நிலையிலும் சக்கர நாற்காலியில் அமர்ந்து வருகை தந்து தவத்திரு சுவாமிகள் அவர்கள் "தீந்தமிழ்த் திருமுறை" என்ற தலைப்பில் உரையாற்றினார். சொற்பொழிவாற்றிய பின் மாநாட்டிற்கு வந்திருந்த பேராளர்கள் அனைவருக்கும் தன் திருக்கரங்களால் விபூதி பூசி ஆசிகள் வழங்கினார்.

அங்கவீனரான சுவாமிகள் அவர்கள் தன்னை நம்பியிருக்கும் ஆதரவற்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் நிரந்தர வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மிக ஆவலாகவுள்ளார். மேட்டுக் குப்பத்திலே அமைந்திருக்கும் இந்த அன்னதான ஆதீனத்திற்குச் செல்பவர்கள் நேரடியாகச் சுவாமிகளின் செயற்பாட்டையும், ஆதரவற்ற சிறார்களினதும், முதியோர்களினதும் நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ளலாம்.

ஆதீன விலாசம்:
தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தருமபரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம் : 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

---

## அமரர் வீரவாகு சண்முகம் அவர்களின் அமரத்துவச் செய்தி



ஓய்வுபெற்ற வைத்தியர் அமரர் வீரவாகு சண்முகம் அவர்கள் 10-02-2011 அன்று இறை வனடி சேர்ந்தார். பௌராணிகரான சைவப் பெரியார் அவர்கள் புராணங்களுக்குப் பலன் சொல்லுவதில் வல்லவர். இந்து சமயப் பேரவை பல வருடங்கள் நடத்திய கந்தபுராணச் சுருக்கப் படன உரையிலும் 2008 ஆம் ஆண்டு நடத்திய கந்தபுராண (ஆறு காண்டம்) படன உரையிலும் பற்றியவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பேரவை பிரார்த்திக்கின்றது.


**A Level U Truck Driving School**

**Training Available 9, 13, 15, & 18 Speed**
**Specialized in A & Z B & D Available**

- A & Z License Guaranteed
- Unlimited Lesson
- Unlimited Road Test
- Air Brake Classes
- & Dock Backing

[redacted]

Class G, G1 & G2
Call: 416-587-7746

**Every Student trains Individually**
**வாரத்தில் 7 நாட்களும் பயிற்சி அளிக்கப்படும்**

**For Appoinment Call: S. R. Thurai or Raja**
Certified Instructor / Ministry Approved Instructor
**416-428-5221 647-409-5221**
160 Birchmount Road, Unit 1B, Scarborough, ON. M1P 2B8

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

இடம்: ஆத்மஜோதி இல்லம்

**ஆங்கில புதுவருடப் பிறப்பு வழிபாடு**

காலம்: 01-01-2011   இடம்: ஆத்மஜோதி இல்லம்

பேரவையின் திருக்கூட்டத்தினர் ஆங்கில புதுவருடப்பிறப்பு வைபவத்தை திருவாசகம் முற்றோதி பக்தியுடன் கொண்டாடினார்கள். அன்றைய நாள் பிரதோச நன்நாளுமாகும்.

**தைப்பொங்கல் வழிபாடு**

காலம்: 14-01-2011

பேரவையின் திருக்கூட்டத்தினரால் ஆத்மஜோதி இல்லத்தில் தைப்பொங்கல் வழிபாடு நடத்தப்பட்டது. திருக்கூட்ட அடியார்கள் திருமுறைப் பஜனை பாடிப் பொங்கல் பொங்கி ஆத்மஜோதி இல்லக் குரு பீடத்திற்கு நிவேதனம் பண்ணி தைப்பொங்கலைப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடினார்கள்.

**திருப்புகழ் முற்றோதல் பூர்த்தி வைபவம்**

காலம்: 26-02-2011

பேரவையின் திருக்கூட்ட அடியார்கள் கடந்த மூன்று மாதமாக வாரந்தோறும் பிரதி சனிக்கிழமைகளில் திருப்புகழ் முற்றோதி 26-02-2011 இல் பூர்த்தி செய்தனர். அருணகிரிநாதரின் கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி மயில் விருத்தம், வேல்விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்புப் போன்ற பாடல்களும் முற்றோதினர். அன்றைய தினம் ஆத்மஜோதி பிரார்த்தனை மண்டபத்தில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட வேல்ப் பெருமான் அன்னபூரணி அம்பாள் ஆகியோர் அபிஷேகம் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.

**மகாசிவராத்திரி வழிபாடு**



காலம்: 02-03-2011 புதன்கிழமை மாலை 6:00 மணி தொடக்கம் 03-03-2011 காலை 6:00 மணி வரை)

ஆத்மஜோதி பிரார்த்தனை மண்டபத் திலே வீற்றிருக்கும் சிவபெரு மானுக்கு பேரவையின் திருக்கூட்டத்தினர் நான்கு

சாம அபிஷேக பூஜை வழிபாடுகள் சிவநாம சங்கீர்த்தனத்துடன் நடத்தினர். இரவு முழுவதும் திருக்கூட்டத்தினர் திருவாசகம் முற்றோதி பூர்த்தி செய்தனர். திருக்கூட்டத்தின் பல அடியார்கள் பக்தி சிரத்தையுடன் பங்கு பற்றிப் பயன் பெற்றனர்.

**குடைச்சுவாமிகளின் (கந்தையாசுவாமிகள்) குருபூசை**

காலம்: 10-03-2011 வியாழக்கிழமை



குடைச்சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு திருவாசகம் முற்றோதி ஆத்மஜோதி பிரார்த்தனை மண்டபத்திலே வீற்றிருக்கும் சிவபெருமானுக்குச் சிவநாம சங்கீர்த்தனத்துடன் அபிஷேக ஆராதனை திருக்கூட்டத்தினரால் நடத்தப்பெற்றது.

**அகண்ட சிவநாம சங்கீர்த்தனம்**

காலம்: 11-03-2011 சனிக்கிழமை (காலை 8:30 தொடக்கம் மாலை 4:00 மணி வரை) அகண்ட சிவநாம சங்கீர்த்தனம் பேரவையின் திருக்கூட்டத்தினரால் காலையில் இருந்து மாலைவரை பக்தி சிரத்தையுடன் ஆத்மஜோதி பிரார்த்தனை மண்டபத்தில் நடத்தப்பெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பலர் பக்தியுடன் பங்கு பற்றினர். சிவநாமசங்கீர்த்தன அலை மண்டபம் முழுவதும் பேரலையாக ஒலித்துக் கொண்டிருந்தது.

**பங்குனி உத்தரத்தை முன்னிட்டு திருவாசக முற்றோதல்**

காலம்: 19-03-2011 சனிக்கிழமை (காலை 8:30 மணிதொடக்கம் மாலை 4:30 மணிவரை)

பேரவையின் திருக்கூட்டத்தினரால் பக்தியுடன் திருவாசகம் முற்றோதி ஆத்மஜோதி பிரார்த்தனை மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு அபிஷேக ஆராதனை நடத்தப்பெற்றது.

**பிரதோச வழிபாடு**

காலம்: பிரதோச நாட்கள்

பிரதோச நாட்களில் திருக்கூட்ட அடியார்கள் திருவாசகம் முற்றோதி பிரதோச வழிபாடு நடத்தினர். வழமைபோல ஆத்மஜோதி பிரார்த்தனை மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு அபிசேக ஆராதனைகள் நடத்தப்பெற்றது.

## சைவ உலகம் வணங்கிப் போற்றிய பஞ்ச கோபுரங்களின் மௌன ஞான ஒளி

சிவதொண்டன் தில்லையம்பலம் சிவயோகபதி,
உலக சைவப் பேரவை- கனடா

மௌனத்திற்கும், அமைதிக்கும் இருக்கும் மதிப்பு விலையிட முடியாதது. "சும்மாயிரு, சொல்லற" என்பது, முருகப் பெருமான் அருணகிரிநாதரைப் பார்த்து அருளிய ஆசிகள். மௌனம் என்று சொல்லும்பொழுதே மனம் பேசாதிருத்தல் எனப் பொருள்படும். அவ்வாறு இருக்கும் நிலையில்தான் மெய்ஞ்ஞானத்தை உணர முடியும். இது ஆன்மீகத்தில் திளைத்த மகான்களின் வாக்கு.

மௌனமே பெரியோர் மனத்துள் வரம்பின்றிக் குடிகொண்டிருக்கும் ஞானத்திற்கு வெளியே தோன்றும் ஒரு அடையாளமாகும். "மௌனம்" என்பது ஞான வரம்பு. இவ்வாறு ஒளி நெறி பெற்ற பஞ்ச கோபுரங்களான மௌன ஞானிகள் முறையே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்சர், பகவான் ரமண மகரிஷி, ஈழத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகள், காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், ஈழத்துக்கைதடி மௌன முனி மார்க்கண்டு சுவாமிகள் ஆவர். இவ் ஐவரும் ஒரு குத்து விளக்கில் ஒளிவிடும் பஞ்சமுனைகள். திருவருள் இந்த அருள்விளக்கை ஏற்றிவைத்திருப்பது சைவ உலகம் செய்த பாக்கியமே. இந்த ஞானியரைக் குரு மூர்த்தங்களாகக் கொண்டாடும் ஆச்சிரமங்களும் உள. இந்த ஞானியர்கள் காட்டிய ஒளிநெறியிலே அருள்பெற்றுய்ந்த அடியாரும் அநேகர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்சர், புனித கங்கைக் கரையிலே தியானத்தில் அமர்ந்து மௌனத்தில் ஒளிநெறி அருளினார். இராமகிருஷ்ண இயக்கம் கதிரொளி போன்று உலகெல்லாம் பரவியிருப்பதால், இராமகிருஷ்ணரை ஒரு அகில உலக ஞானி என்றே கூறலாம். "உன்னை நீ அறிந்துகொள் அப்பொழுது கடவுளை அறிவாய்",இறைவனை வெளியே தேடுதல் அறியாமை. தமக்குள்ளே இறைவன் இருப்பதை உணர்வதே அறிவு இறைவனை உணர்ந்தவனே அவரது பாதத்தாமரைகளில் தன்னை அர்ப்பணம் செய்வான், தியானத்தில் சித்தியடைந்தவனுக்கு முத்தி நெருங்கிவிட்டது" ஆகியவை பரமகம்சர் அருளிய அருள் மொழிகளில் சிலவாகும்.

சிவயோக சுவாமிகளும் இராமகிருஷ்ண பரமகம்சரிடம்

பெருமதிப்பு வைத்திருந்தார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமத் பிரேமாத்மானந்தாஜி இராமகிருஷ்ணமடத்தின் துறவியாக வருவதற்கு வழிகாட்டியாக, சிவயோக சுவாமிகள் ஊக்கம் கொடுத்தார். யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டன் நிலையங்களில் இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த "காவி" உடுத்த துறவிகள் மட்டும், தங்கும் வசதி செய்வதற்கு சிவயோக சுவாமிகள் உத்தரவு கொடுத்தார். ஆனால், "கந்தசுவாமியே காவி உடுத்து வந்தாலும் தங்கும் வசதி இல்லை" என்றும் கட்டளையிட்டார். காரணம் யாதெனில், சிவதொண்டன் ஆசிரமத்தில் புனிதம் கட்டுப்பாடு, ஆன்மீகம் ஆகியவை மதிப்புடன் பேணப்படல் வேண்டும் என்ற கொள்கைதான். காவி உடுத்து வரும் சாதாரண பண்டாரிகளிடம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும், "அவர்களுக்கு அன்னதானம் மாத்திரம் கொடுத்து, உடனே வெளியே அனுப்பிவிடுக" என்றும் மிக எச்சரிக்கையுடன் சுவாமி கட்டளையிட்டார்.

சிவயோக சுவாமிகள் தமிழ்நாட்டில் உள்ள சைவத் தலங்களுக்கு ஒரு தருணம் யாத்திரை சென்றபோது, சிதம்பர நடராஜர் தரிசனம் செய்தபின்னர் திருவண்ணாமலைத் தலத்திற்கும் சென்றார். அங்கு ரமண மகரிஷியின் ஆச்சிரமத்துக்கும் சென்று ரமணரின் அருகில் சுவாமியும் அமர்ந்தார். இருவரும் "சொல் எல்லாம் மோனம்" என்றிருப்பவர்களே. ஆதலால் அவர்களுக்கு வாய்ப்பேச்சு "என்ன பயனுமில". சிவயோக சுவாமிகள் பின்னர் இதுபற்றிக் கூறியபோது "ஒரு குன்றின் முன் இருந்தது போன்றிருந்தது" என ரமண மகரிஷியை மதித்துப் போற்றினார். அப்பரும் சம்பந்தரும் ஒருவரையொருவர் மதித்தும், வணங்கியும் இருந்த நிலைபோல் ரமணரும் சிவயோகரும் விளங்கினார்கள்.

ரமண மகரிஷி வாழ்ந்த காலத்தில் அவரைத் தரிசித்த அன்பர்கள், அடியார்கள் யாவரும் அவரவர் சந்தேகங்களுக்கான விளக்கங்களை மகரிஷியின் அமைதிப்பார்வையாலும், மௌனத் தாலுமே பெற்றனர். அவரைத் தரிசிக்க அன்பர்கள் பலர் குவிந்தனர். குழப்பம் தெளிவு பெற்றனர். ரமண பகவான் அண்ணாமலைச் சோதியாய்த் திகழ்ந்தார்.

ரமண மகரிஷியையும் சிவயோக சுவாமிகளையும் தனது இரு கண்களாக மதித்துப் போற்றி, குருபீடமாக வணங்கி வந்த ஒரு உத்தம சீடர், ஈழத்திருநாட்டின் நயினை நாகபூஷணி அம்மனைத் தனது குலதெய்வமாக வணங்கிவந்த சைவப் பெரியார், அமரர் கே. ராமச்சந்திரா அவர்களாவர்.இவர் வழியைப் பின்பற்றியவர்,

சைவப்பெரியார் அமரர் 'ஆத்மஜோதி' முத்தையா அவர்களாவர்.

காஞ்சிப் பெரியார் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தில் பீடாதிபதியாகவும் 'ஸ்ரீ காஞ்சி காமகோடி' காஞ்சிப் பெரியவர் என்றும் உலகில் பரந்து வாழும் சைவமக்கள் மதித்துப் போற்றி, வணங்கிவந்த ஒரு மகாஞானியாவார். தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு சிறிது வார்த்தைகள் மாத்திரம் கூறி, நல்லாசி வழங்குவார். சிவசின்னமாக, எளிமையாகக் காட்சிகொடுப்பார். சிலவேளைகளில், தியான நிலையில், மௌனத்தில் ஆழ்ந்திருப்பார். மௌன குருவாகவே திகழ்ந்தார்.

ஈழவள நாட்டின் நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் அருளாட்சி புரிந்த செல்லப்பா சுவாமிகளின் உத்தம சீடராகி அருள் பெற்றவர் தவத்திரு சிவயோக சுவாமிகள். "சும்மா இரு" (Be still) "மௌனமாக இரு" என்று பற்பல அன்பர்களுக்கு நல்வழி காட்டிய ஞான ஒளி! அவற்றுடன் "தன்னை அறி" எனும் தாரக மந்திரத்தையும் (know thyself) உபதேசித்தார். "தன்னைத் தன்னால் அறிவதே குருபூசை, மற்றெல்லாம் வெறும் உண்டாட்டு" என்றும் சிவயோக குருமணி கூறுவார். யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டன் ஆச்சிரமங்களில் தியானம் செய்வதற்குத் தயாராக வேண்டிய கொள்கை நெறி சிவயோக சுவாமிகளால் விதிக்கப்பட்டது.

"சொல் எலாம் மோனம்
தொழில் ஆதியும் மோனம்,
எல்லாம் நன்மோன நிறைவே
மௌனம் நிலவுக"

சிவயோக சுவாமிகளின் உத்தம சீடர்தான், ஈழத்துக் கைதடி மார்க்கண்டு சுவாமிகள். இவரை "மௌன முனி" என்றும் மரியாதையுடன் அன்பர்கள் அழைப்பர். நன்றும், தீதும் அறியாத நன்மோனத்தில் ஆழ்ந்து கிடக்கும் நிட்டர். சிவயோக சுவாமிகள், மௌன முனியைப் பற்றித் தன் அடியவர்களிடம் கூறும்பொழுது, "அவனை உங்களுக்கெல்லாம் ஒரு திசைகாட்டியாக வைத்திருக் கிறேன்" என்று கூறுவதுண்டு. மார்க்கண்டு சுவாமிகளும் "நற்சிந்தனை" எனும் நறுமலர்களைச் சொரியும் கற்பக தரு எனவே திகழ்ந்தார்.

காவாய், சைவ சித்தாந்த ஆதீன தாபக முதல்வரும், சிவயோக சுவாமிகளின் சீடருமான குருதேவர் என்று சைவ உலகத்தினரால் அன்புடன் அழைக்கப்படுபவருமான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகளிடம் மரியாதையும்,

பெருமதிப்பும் அர்ப்பணம் செய்து, “நற்சிந்தனை” பற்றிய விளக்கங்கள், சைவ சித்தாந்த தத்துவ சாரம் பற்றிய விளக்கங்கள் ஆகியவற்றை ஆங்கில மொழியிலும் நன்றாகப் பாண்டித்தியம் பெற்ற மார்க்கண்டு சுவாமிகளிடம் கற்றுக்கொண்டார்.

சிவயோக சுவாமிகள், ஒருமுறை சிவராத்திரி விரத நாளில் கைதடி ஆச்சிரமம் சென்று, தாள, மேளம் இல்லாமல் பாட்டு, படிப்பு, நான்கு சாமப்பூசை என்ற ஆடம்பரங்கள் எல்லாவற்றையும் அடியோடு விட்டுவிட்டு, தானும் தனது சீடனும்தியான நிலையில், மௌனமாக விரதம் அனுட்டித்து, தூய சிவராத்திரி விரதத்தை பூரணமாக நிறைவுசெய்தனர்.

சிவயோக சுவாமிகள் எங்களுக்குப் பல வேலைகள் தரவில்லை. ஆனால் ஒரே ஒரு வேலைதான் - அது யாதெனில், “தன்னைத் தன்னால் அறிவதுதான்!” என்று மார்க்கண்டு சுவாமிகள், மிகச் சுருக்கமாகத் தனது அடியார்களுக்குக் கூறுவார்.

இங்கிலாந்தின் சோல்பரிப் பிரபுவின் புதல்வன், சாந்தசுவாமி அவர்களும் சில ஆண்டுகள் கைதடி ஆச்சிரமத்தில் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்கியிருந்து, மௌனியாகவே தியானத்தில் திகழ்ந்தார்.

ரமண பகவானின் சமாதி நாள். அன்று மாலை அவரைச் சூழ்ந்திருந்த அன்பர்கள், அருணாசல அட்சர மாலையை உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது பகவானது கண்கள் குளமாகி, நீர் தாரை தாரையாகப் பெருகியது! அருணாசல சிவத்தின் மீது கொண்ட அன்பின் பெருக்கே அக்கண்ணீராகும். மாணிக்கவாசக சுவாமிகளையும், “அழுது அழுது அடி அடைந்த அன்பர்” என்பர். “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி” செய்த இறைவழிபாடாகும்.

சிவயோக சுவாமிகள் மகாசமாதி அடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு, தமது நோய்பற்றிக் கூறியவை வருமாறு:

“இந்த நோய் ஒரு வரப்பிரசாதம். கன்மத்தை அனுபவித்தே தீரவேண்டும். உடம்பு தோன்றியபொழுது, அதோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கொண்டு வந்தது. அதில் நோயும் ஒன்றாகும். இந்த நோயைப் பற்றி ஆராய வேண்டியதில்லை. இது எப்பவோ முடிந்த காரியம். ஒன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. இந்த நோயின் காரணத்தை அறிந்தவர், இது எல்லாத் துக்கங்களுக்கும் நிவர்த்தி என்பதை அறிவர். அறிந்து அமைதியாயிருப்பர்.

இராமகிருஷ்ண பரமகம்சருக்கும் ரமண மகரிஷிக்கும்

புற்றுநோய் வந்ததை அன்பர்கள் அறிவார்கள். உடலுக்குப் பிணி, மூப்பு, சாக்காடு வருவது இயற்கை என்றும், ஞானிகளின் உடம்பும் இதற்கு விலக்கானவை அல்ல என்றும் சுவாமி விவேகானந்தர் கூறினார்.

'சர்வம் சிவமயம்! சர்வம் சிவன் செயல்!
சும்மா இரு ; தன்னை அறி. ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், முழுவதும் உண்மை.
ஓம் நமசிவாய''

- சிவயோக சுவாமிகள்

(நாள்தோறும் திருவாய் மலரும் சில வரிகள்)

---

**சான்றோர்களின் அமுத வாக்குகள்**

சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பி அழைக்க முடியாது.

உண்மையைக் கடைப்பிடிப்பவனால் அடைய முடியாதது எதுவுமில்லை.

ஒருவனுடைய நடத்தையே அவனுடைய இடைக்கல். அவன் செய்யும் தொழில் அல்ல.

விவேகம் உள்ளவனுக்கு இன்பமும் இல்லை துன்பமும் இல்லை




## இந்து சமயத்தின் கால அளவை

# Hindu Cosmology and timeline

டாக்டர் இ. லம்போதரன்

The mystery of the formation and the format of this universe, its journey and its fate have been the fascinating subject of the human race for centuries. The calculations and research in these areas have been a matter of great interest for many. Our ancient wisdom as outlined in the Saiva scriptures gave ample information on this. Now we came to know that, our ancient calculations are not only comparable but also compatible with forthcoming modern scientific calculations and findings. All other calculations or conceptions of other ancient civilizations and religions differ greatly from the modern scientific concepts of the universe. Almost all of them are proved to be baseless imaginary speculations. The cream of the fascinating concepts of Hindu cosmology and its timeline can only be found in available Saiva scriptures of Sanskrit Agamas, Tamil Mei Ka'nda Sastras and Tamil Thirumurai Hymns. Examining and studying these ancient Saiva scriptures is the only way to understand the ancient concepts of cosmology and its timeline as outlined in Hinduism. As almost all of these available scriptures are in Tamil and Sanskrit languages we heavily depend on various translations and commentaries to understand the meaning of these ancient scriptures. Fluency or familiarity in Sanskrit or Tamil language is an advantage to approach these scriptures but not a pre requisite. With little time and familiarity of these scriptures with the help of the translations and commentaries one will be able to approach them directly. But the guidance of the Guru is strongly recommended for this. Saivam says, only The almighty creator will come personally as the Guru when time is ripe for us to reveal this mystery. With this mystic revelation and envision one will be free from all of his or her restricting bondages which are there from the time eternal, and he or she will be free for ever from then. We can try to apprehend the meaning and merits of this ancient wisdom with the revelations of the modern cosmology and atomic science now. The greatest

problem in the science today is to unify the quantum theory with Einstein's theory of Gravity. This will pave the way to open up the ' the theory of everything' in other words to discover the 'Mind of the God or the creator' as Einstein once wrote. Such a theory will answer some of our deepest questions, such as ' What happened before the Big Bang? Are there any parallel universes? Is time travel possible? What lies inside a black hole? Stephen Hawking, Theoretical Physicist of the University of Cambridge has made some of the biggest breakthroughs in this area. Unlike many other scientists he has written number of remarkable books for the common man to understand these cosmic truths. The first one of this series was 'A brief History of Time' published in 1988. This has thrown more light on the understanding of the cosmic space and the sub atomic space, the homology of their working module, the origin of the universe as cataclysmic explosion from the black hole and subsequent expansion (நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன) with the Big Bang (பெருநாதம்), its existence, journey and the resolution again at the end to the same origin- Black Hole by the retracting process of Big crunch (பேரொடுக்கம் ), only to reappear again by another cataclysmic explosion of Big Bang (தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம் ) after billions and billions of years. With these late 1980s scientific revelations in the cosmic science and atomic physics, our Hindu concept of the Cosmology and space together with its timeline is no longer a myth but a matching, comparable revelation of TRUTH. In addition to the homology of the origin, existence and working module of the cosmic space and the sub atomic space Hinduism also states about the homologic Mystic spiritual space – Chittampalam-within the souls as a base for dancing Siva for his cosmic dance within us, as it is in the sub atomic and cosmic spaces. With this revelation the mystery of the origin and working module of ALL - souls, particles and the universe is revealed. This is the 'Mind of the God' as stated by the scientists. The scientists created a Big Bang machine in Swiss for an experiment to find out more about the 'God Particle' which gave the origin to all the existing particles

and energy forms of the universe. But they are still far from the 'Mind of the God' as revealed in our ancient Hindu Saiva Scriptures. Let's take a glimpse at this marvelous ancient wisdom of East from the Saiva Hindus.

60 தற்பரை = 1 விநாடி
60 விநாடி = 1 நாழிகை
2-1/2 நாழிகை = 1 மணித்தியாலம்
60 நாழிகை = 1 நாள்

365நாள் 15 நாழிகை 31 விநாடி 15 தற்பரை = 1 சௌர வருடம்
360 வருடம் = 1 தேவ வருடம்

**சதுர் யுகங்கள்:**

**1. கிருத யுகம்**
4000 தேவ வருடம் + 400 வருடம் சந்தி + 400 வருடம் சந்தியாயம காலம் = 4800 தேவ வருடங்கள் = 17,28,000 வருடங்கள் = 1.728 Millon years.

**2. திரேதா யுகம்**
3000 + 300 + 300 = 3600 தேவ வருடங்கள் = 12,96,000 வருடங்கள் = 1.296 Million years

**3. துவாபர யுகம்**
2000 + 200 + 200 = 2400 தேவ் வருடங்கள் = 8,64,000 வருடங்கள் = 0.864 Million years

**4. கலி யுகம்**
1000 + 100 + 100 = 1200 தேவ வருடங்கள் = 4,32,000 வருடங்கள் = 0. 432 Million years.

**சதுர் யுகம்** - 4800 +3600 + 2400 + 1200 = 12,000 தேவ வருடங்கள் = 43,20,000 வருடங்கள் = 4. 32 Millions of years.

71 சதுர் யுகம் = 1 **மன்வந்தரம்**
ஒவ்வொரு மன்வந்தரத்திலும் முடிவிலும் ஒரு **பிரளய காலம்.**

பிரளயத்தில் உலகங்கள் யாவும் நீரில் அமிழும். இது ஒரு கிருத யுககாலம் அதாவது 1.728 Million years.

பிரம்மாவின் பகல் = கற்பம்

1000 சதுர் யுகம் = 1 கற்பம் =14 மன்வந்தரங்களும் அவற்றின் பிரளய காலங்களும் = 994 சதுர் யுகம் லோக காலமும் 6 சதுர் யுகம் பிரளய காலமும் = 4,320,000,000 = 432 கோடி வருடங்கள் - 432 Billions Years - 1 கற்பம் - இது பிரம்மாவுக்கு 1 பகல். இது முடிய இதில் உலகங்கள் யாவும் மகா பிரளயத்தில் அமிழும்

கற்பமும் ஈறும் கண்டோன் காண்க - திருவாசகம்
ஏதிலாக் கற்பம் எண்ணில சென்றன - கந்த புராணம் காசியப்ப முனிவர் உபதேசம் 20ம் பாடல்

பிரம்மாவின் வயது:
இப்போது இருக்கும் பிரம்மாவுக்கு வயது 50 மாதம் ஆறு மாதம் ஒரு நாள் - இவ்விதமாகப் பிரமாவுக்கு நூறு வயது உண்டு = 3,15,360 கோடி வருடங்கள் (3,156.6 Trillion Years)

இப்படி பல கோடி பிரம்மர்கள் இருந்திருக்கிறார்கள்
மகா பாரதத்தில் மார்க்கண்டேய பர்வதத்தில் மார்க்கண்டேயர் பாண்டவர்களை வன வாசத்தில் சந்தித்தபோது அவர் இவ்வாறு மூன்று பிரம்மாக்களைக் கண்டவர் என்று வருகின்றது.

கோடி கோடி பிரம்மர்கள் - திருவாசகம்

நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே
- திருநாவுக்கரசர் தேவாரம் -5ம் திருமுறை 100ம் பதிகம் 3ம் பாடல்

நட்ப்பு கால அளவை:
இப்போது நடப்பது சுவேதவராஹ கற்பம்
இதில் ஆதியில் ஒரு பிரளயமும் அதன் பின்னர் 6

மன்வந்தரங்களும் அவற்றின் பிரளயபிரளயங்களும் கழிந்தன. இப்போது நடப்பது ஏழாவது மன்வந்தரம், இது வைவஸ்வத மன்வந்தரம். பூசைகளில் சங்கல்பம் செய்யும்போது கூறும் மந்திரத்தில் இந்தகால அளவை வரும்.
சுவேத வராஹ கல்பே - வைவஸ்வத மன்வந்தரே - கலியுகே

இதில் 27 சதுர் யுகங்கள் கழிந்தன. இப்போது நடப்பது 28வது சதுர் யுகம். இதில் கிருத திரேதா துவாபர யுகங்களும் முடிந்து கலி யுகம் 17 Feb 3102 BC இல் ஆரம்பமாகி 5109 வருடங்கள் கழிந்தன. கலியுகம் முடிய இன்னமும் 4,28,898 வருடங்கள் உள்ளன. இதன் பின்னர் மீண்டும் இன்னொரு சதுர் யுகம் தோன்றும். மன்வந்தரத்தின் முடிவில் வருகின்ற அடுத்த பிரளய அழிவுக்கு இன்னமும் இவ்வாறு 43 சதுர் யுகங்கள் (71 சதுர் யுகம் ஒரு மன்வந்தரம்) அதாவது 185.76 மில்லியன் வருடங்கள் செல்லும்.

Land marks for current historical timing and calculations:
கிறிஸ்து வருடம் 2008 - கிறிஸ்து பிறந்ததில் இருந்து ஆண்டுகளை கணக்கிடும் வழமை. கிறிஸ்து பிறந்து 2008 வருடங்கள் கழிந்தன.

சாலிவாகன சக வருடம் - 1930. சாலி வாகனன் விக்கிரமாதித்த மகாராஜாவின் பேரன். இவன் காலத்தில் பஞ்சாங்க கணிதத்தை சீர் படுத்தினான். அதிலிருந்து 1930 வருடங்கள் கழிந்தன.

கொல்லம் வருடம் 1183- கேரளாவில் உள்ள பழைய கொல்லம் நகரம் கடலில் அமிழ்ந்தது. இதை மீண்டும் கட்டி எழுப்பிய ஆண்டில் இருந்து 1183 வருடங்கள் கழிந்தன.

திருவள்ளுவர் ஆண்டு - திருவள்ளுவர் பிறந்த 2034 ஆண்டுகளுக்கு முன்னம் இருந்து ஆண்டுகளைக் கணக்கிடும் வழமை

---

## ஆத்மஜோதியாரின் அமுத மொழி

தருமமே உருவானவர் இறைவன். தருமத்தின் மூலமாகத்தான் அவருடைய அருளைப் பெறமுடியும். தருமத்தை தாபித்தவரும், வளர்த்தவரும் கடவுளேதான். வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை தருமத்தின் உயர்வைப் பறைசாற்றுகின்றன. உலகிலுள்ள எல்லாமத நூல்களும் அதைப் பின்பற்றுபவர்களுக்கு புரியும் மொழியில் தருமத்தின் உயர்வைப் பற்றிப் பேசுகின்றன.

# தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலயக் குடமுழுக்குப் பெருவிழா

யாழப்பாணம் தெல்லிநகர் துர்க்காபுரத்திற் கோயில் கொண்டருளும் எல்லாம்வல்ல துர்க்காதேவி திருச்சிலைக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மற்றும் இராசகோபுரம் புதிய மணிக்கோபுரம் ஆகியவற்றுக்கும் கடந்த 24.01.2011 திங்கட்கிழமை குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடந்தேறியது. தொடர்ந்து 45 நாட்கள் மண்டல முழுக்காட்டு விழாக்களும் நடந்தன. குடமுழுக்குப் பெருவிழாக் கிரியைகள் யாவும் மாவை ஆதீன முதல்வர் மகாராாசகுரு சு.து. சண்முகநாதக் குருக்களின் ஆசியுடன் நடைபெற்றது.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 86ஆவது அறக்கொடை விழா

இவ்விழா 07.01.2011 வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகள் இ. கணேசமூர்த்தி - ஜெயதேவி தம்பதிகள் பிரதம விருந்தினராகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நா. வேதநாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார், யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த. யோகானந்தா, யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி. விசாகரூபன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

விழாவிற் பின்வரும் பெருமக்கள் சிவத்தமிழ் விருது வழங்கப்பெற்றுச் சிறப்பிக்கபட்டனர்:

முதுபெரும் புலவர் திரு. சி.க. சிற்றம்பலம்

பரோபகாரி அமரர் K.K. சுப்பிரமணியம்

இறைபணிச் செம்மல் திரு. த. கயிலாயபிள்ளை

இசைமணி திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன்

பண்டிதை திருமதி பொன். பாக்கியம்

சிவத்தமிழ்ச்செல்வி அறக்கொடைகளாக யாழ். போதானா வைத்தியசாலையின் 1ஆம் 10ஆம் அறைகளிலுள்ள நோயாளர் உணவுண்ணும் பகுதிக்கும் முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 100 க.பொ.த.(சா/த 2011) மாணவருக்கும் நிதியுதவி வழங்கப்பெற்றது.

# சொற்பொழிவுக்கு ஒரு தங்கம்மா அப்பாக்குட்டி

கவிநாயகர் வி. கந்தவனம்

முன்னுரை

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆற்றல்கள் பல. கடமையே கண்ணான கல்லூரி ஆசிரியராக, சிறந்த கல்வி யாளராக, கற்றதை உணர விரித்துரைக்கும் சொற்பொழிவாளராக, பட்டிமன்றப் பேச்சாளராக, கட்டுரைக்கலை வல்லாளராக, நிகரற்ற நிருவாகியாக, ஆன்மிக அன்னையாக, சான்றாண்மை மிகுந்த சமூகவாதியாக, மங்கையர் மதிப்பை வளர்த்த மங்கையர்க்கரசியாக அவர் தமிழ்மக்களைக் கொள்ளைகொண்டவர். இவ்வாளுமைகளுள் தங்கம்மா அவர்கள் சொல்லின் செல்வியாக, சொற்பொழிவாளராக விளங்கிய சிறப்பை முதன்மைப்படுத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முற்காலத்திலாயினும் இக்காலத்திலாயினும் சொற்பொழிவு ஒரு முக்கியமான கலையாக விளங்கி வருகின்றது. முற்காலத்தில் அறிவுவளர்ச்சிக்கு அது வலுவான கருவியாக அமைந்திருந்தது. அதனால்,

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை1

என்று வள்ளுவர் பெருமான் வலியுறுத்தவேண்டிய தேவையும் ஏற்பட்டது. அக்காலத்தில் கல்வி பரவலாக்கப்படவில்லை. அதனாற் 'கற்றில லானாயினும் கேட்க' என்றும் அவர் சொல்லி வைத்தார். அச்சக வசதிகள் மற்றும் ஊடகங்கள் வளர்ச்சியடைந்த இக்காலத்திலும் சொற்பொழிவின் தேவை குறைந்துவிடவில்லை.

பின்னணி

தமிழீழத்தில் தமிழையும் சைவத்தையும் வளர்க்கச் சொற்பொழிவுக்கலையை அரங்க மட்டத்தில் பயன்படுத்தி வெற்றி கண்டவர் நல்லைநகர் ஆறுமுக நாவலர் அவர்கள். அவரைத் தொடர்ந்து அவரது மாணவர் பரம்பரையினர் பலர் சிறந்த சொற்பொழிவாளர்களாகத் திகழ்ந்தனர்.

நாவலர் மரபில் சொற்பொழிவால் மக்கள் மத்தியில் சமய உணர்வையும் தமிழ்மொழிப் பற்றையும் வளர்த்தவர் தங்கம்மா அவர்கள். இந்தப் பணிக்கு அவரிடம் இயற்கையாகவும் வளர்த்தெடுக்கப்பட்டவையாகவும் அமைந்த தகைமைகள் முக்கியமானவை. இயல்பாய் அமைந்த தகைமைகள் அவரது குடும்பத்தால் வந்தவை. இரண்டாவது அவர் கல்வி கற்ற இராமநாதன் கல்லூரியாற் கிடைத்தவை. இப் பின்னணிகளின் அடிப்படையில் அவர் சொற்பொழிவுத் துறையிற் பெற்ற வெற்றிகளுக்கான காரணங்களை ஆய்வது பயனுடையது.

### 1.அழகிய தோற்றம்

இயற்கையாகவே தங்கம்மா அவர்கள் பெற்றிருந்த அழகிய தோற்றம் பலருக்குக் கவர்ச்சியாக இருந்தது. அவர் பேச்சைக் கேட்பதிலும் அவரை அரங்கத்திலே பார்த்து இரசிக்கவும் ஒரு கூட்டம் இருக்கவே செய்தது. அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்த கூட்டத்தின் சலசலப்பு அவர் கூட்டத்துக்கு வந்து இறங்கிய அளவிலேயே அமைதி யாகிவிடும். அவர் முகத்தைப் பார்த்துத் தங்கள் துயர்களைப் போக்கியவர் எண்ணிலடங்கார். அவர் அழகான சேலைகளைக் கட்டிக்கொண்டு வருவதும் மேடையிலே நேர்கொண்ட பார்வையுடன் நின்று பேசுவதும் தனியழகு. அது கற்றவரையுங் கவர்ந்தது. மேடையில் எப்படித் தோன்ற வேண்டும் என்பதற்குப் பிரமாணமாக அமைந்தவர் அவர்.

புற அழகுக்கு மெருகூட்டியது அவரது அகத்தின் அழகு. அகத்தின் அழகு முகத்திற் புன்னகை பூத்திருக்கும். அதன் தூய்மைபோல் நெற்றியில் திருநீறு திகழ்ந்திருக்கும்.

பாடறிந்து ஒழுகும் பண்பிலும் ஒப்பிலாப் பக்குவ அழகு பால் வார்த்துக்கொண்டே இருக்கும். வந்தோமா பேசினோமா போனோமா என்றில்லாது மக்களோடு மதிப்பார்ந்த உறவை வளர்த்து உயர்ந்த ஒரு பேச்சாளர் அவர்.

### 2. கவர்ச்சியான குரல்

அடுத்து அவரது கணீரென்ற தங்கக் குரலைச் சொல்லுதல் வேண்டும். பேச்சுக்காயினும் பாட்டுக்காயினும் குரல்வளம் இன்றியமையாதது. இசைத்துறையில் குரல் இல்லாதவருக்கு விரல் என்று ஒரு

பழமொழியுண்டு. ஆனால் பேச்சுத் துறையில் அத்தகைய தெரிவுக்கு இடமில்லை. தனது குரலை இழந்தபோது பிரபல சொற்பொழிவாளர் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் பட்ட கவலை சொல்லுந்தரமன்று.

குரல் வளம் தங்கம்மா அவர்களிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. கேளாரும் வேட்ப மொழிவதற்கு அறிவு மட்டும் இருந்தாற் போதாது. செவிக்கு இன்பந்தரவல்ல குரல் வளமும் இருத்தல் வேண்டும். அது அவருக்கு ஒரு தெய்வக் கொடையாயிற்று. சிலர் பேசத் தொடங்கிய பின்னரும் அவையில் சலசலப்பிருக்கும். தங்கம்மாவின் குரல் ஒலிக்கத் தொடங்கிய அளவிலேயே அவை அமைதியாகிவிடும்.

3.அறிவு நலம்

பேச்சாளர் ஆழ்ந்தகன்ற அறிவுடையவராக இருத்தல் வேண்டும். பானையிலே இருந்தாலே அகப்பையில் வரும். அவரது அறிவை வளர்த்த பெருமை இராமநாதன் கல்லூரிக்குரியது. இதனை அவர் அங்கு கல்வி கற்ற முறையை அவர் காலத்தில் அங்கு பயின்றவரும் பின்னாளில் அக்கல்லூரிக்கு அதிபராக இருந்தவருமாகிய திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் இவ்வாறு எழுதுகிறார்:

"தங்கம்மையில் நாம் காணும் பக்குவமும் பண்பும் பக்தியும் திருவருளினாலும் முன்னைத் தவத்தினாலும் நாம் செய்த புண்ணியத்தினாலும் என்பது உண்மையாயினும் அவரை இந்த நிலைக்கு உயர்த்தியதற்கு அவர் ஆசிரியப் பயிற்சி பெற்ற கலைக் கூடமாகிய இராமநாதன் கல்லூரி பெரும் பங்கு வகிக்கின்றது. ஆங்கிலப் பாடசாலை, தமிழ்ப் பாடசாலை, ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை என்ற எல்லாப் பிரிவுகளும் விடுதியில் தங்கிப் படிப்பதுதான் அக்கால மரபு. அத்தனை பிரிவுகளும் காலை மாலை ஒன்றாக வரிசையாகி மேல்மாடியிலிருக்கும் சிவகாமிசமேத நடராஜப்பெருமானிடம்போய் வழிபாடு செய்வது வழமை. பூசைமுடிந்து சுற்றிப் பாடி விழுந்து கும்பிட்டு முடிந்ததும் கிழமைகளிற் சிலநாட்களிற் குறிப்பிட்டபடி புராணபடனம் நடைபெறும். சில நாட்களிற் சமயப் பிரசங்கங்கள் நடைபெறும். புராணம் படிப்பதும் பயன்சொல்லப்படுவதும் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையினரால் நடத்தப்படும். தங்கம்மா புராணம் பாடும்பொழுது காதுகள் குளிரும்!

பொருள் பயன்சொல்லுவதற்கு முன்னரே புரியும்! தெய்வீக உணர்வு செறிந்து உடல் புல்லரிக்கும்! உள்ளம் புளகாங்கிதமாகும்! ஓரே காலத்தில் நானும் ஆங்கிலப் பாடசாலையிற் படித்தமையால் இவற்றை நேரிற் காணவும் கேட்கவும் வாய்ப்புக் கிட்டியது.

"இராமநாதன் கல்லூரியிற் சைவசமயச் சூழலில் காலை புலருமுன் எழுதல், பூப்பறித்து மாலை கட்டுதல், கோயில் அலகிடுதல், திருவிளக்குகளையும் பாத்திரங்களையும் விளக்கிப் பூசைக்கு ஆயத்தஞ் செய்தல், சுற்றிப் பாடுதல், விழுந்து நமஸ்கரித்தல், இரு கைகளையும் கூப்பித் தொழுதல், பண்ணுடன் தேவாரம் பாடுதல், பண்ணுடனும் இசையுடனும் வாத்தியங்களுடனும் பாடுதல், சமயச் சொற்பொழிவாற்றுதல் முதலியவற்றைத் தங்கம்மா அப்பாக்குட்டியுடன் பயில வாய்ப்பு ஏற்பட்டது. அவற்றைப் பூரணமாக வளர்த்து, செயற்படுத்தி உலகு பயனுற வாழ்ந்து காட்டுபவரும் தங்கம்மாவே."

இவ்வித பயிற்சிமுறைகளோடுகூடிய கல்வியைப் பெற்று, ஆசிரியர் பயிற்சியிலும் சித்தியடைந்து 1944ஆம் ஆண்டில் பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியராக வெளியேறிய தங்கம்மா அவர்கள்,

> யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு

என்ற வள்ளுவர் பெருமான் வாக்குக்கு அமைய இடைவிடாது கற்றுக்கொண்டே இருந்தார். ஆசிரியரான பின்னர் பண்டிதர் பட்டத்துக்குப் படிக்கத் தொடங்கினார். படித்துப் பாலபண்டிதர்(1952), பண்டிதர்(1953) தேர்வுகளிற் சித்தியெய்தினார். தொடர்ந்து கற்றுச் சென்னை சைவசித்தாந்த சமாசத்தின் சைவப்புலவர் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்(1958). இப்படிப்புகள் தமிழ், சைவ இலக்கியங்களை ஆய்ந்து ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள அவருக்கு வாய்ப்பளித்தன.

(தொடரும்)

---

✸ கடவுள் ஒரு கதவை மூடுகிறார் நூறு கதவுகளைத் திறக்கிறார்.

✸ நூல் நிலையம் பெரியோரின் ஆத்மாக்கள் வாழும் புண்ணிய தலமாகும். - ஓர் ஞானி

## கச்சியப்பர் கந்தபுராணம்

# ஒரு தமிழ்நாட்டுக் காப்பியம்

**கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள்**

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**கந்தபுராண அமைப்பு**

கந்தபுராண அமைப்பு, கதைப் போக்கு, அது கூறும் பொருள் முதலியவற்றை உற்று நோக்கும்பொழுது, அது ஒரு தமிழ் நாட்டுக் காப்பியமாகத் தோன்றுகின்றது.

காப்பியங்களில் முதலிற் கடவுள் வாழ்த்து, ஆற்று வர்ணனை, நாட்டு வர்ணனை, நகர வர்ணனை முதலியவற்றைக் கூறுவதுமரபு. இம்மரபுப்படி அமைந்த இக்காப்பியத்திற் காப்புக் கூறியபின் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார். இதில் சுப்பிரமணியருக்கு வாழ்த்துக் கூறும்பொழுது, தமிழ் நாட்டிலுள்ள ஆறுபடை வீடுகளையும், காஞ்சியிலுள்ள குமரகோட்டத்தையும் நமக்கு ஞாபகப்படுத்துகின்றார். சுப்பிரமணியர் வாழ்த்தில்,

"திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்"
"சீரலைவாய் வரு சேயைப் போற்றுவாம்"
"ஆவினன் குடிவரும் அமலர் போற்றுவாம்"
"ஏரகத் தறுமுக னடிக ளேத்துவாம்"
"குன்று தோறாடிய குமரற் போற்றுவாம்"
"பழமுதிர் சோலைப் பகவற் போற்றுவாம்"
"குமரகோட்டம் வாழ் ஆறுமுகப்பெருமாள் அடிகள் போற்றுவாம்"
எனப் பாடியுள்ளார்.

ஆற்றுப்படலம், திருநாட்டுப்படலம், திருநகர்ப்படலம் முதலியவற்றைப் பாடும்பொழுது, கந்தன் அவதாரத்தோடு சம்பந்தப்பட்ட கைலாயத்தையும், கங்கையையும் பாடாது, பாலியாற்றையும், தொண்டை மண்டலத்தையும், காஞ்சி மாநகரத்தையும் பாடியுள்ளார்.

பாலியாற்றை வர்ணிக்கும்பொழுது கண்ணப்பநாயனாரை ஞாபகப்படுத்துகின்றார். பாலியாற்றுக்கு உற்பத்தியிடமான நந்திமலைமீது, கரிய மேகங்கள் வானவில் தோன்ற மழையைப் பொழிவது, கண்ணப்பர் வில்லுடனின்று தன் வாயிற் கொணர்ந்த நீரைச் சிவலிங்கத்தின் மீது சொரிவதை நிகர்த்ததென வர்ணிக்கின்றார் கச்சியப்பர்.

“பூட்டு கார்முகம் தன்னொடும் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங்கிரிமிசை உகுத்தல்
வேட்டுவக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்கு
ஆட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுளதன்றோ.”

தொண்டை மண்டலத்தை வர்ணிக்கும்பொழுது அங்கு சிவனடியார்களும், அறிஞர்களும், யோகிகளும், தவசீலர்களும் அதிகமாக வாழுகின்றனரென்கின்றார்.

“செக்கரஞ்சடை முடிச் சிவனுக்கன்பராய்த்
தக்கவ ரறிஞர்கள் தனத்தர் செல்வராய்த்
தொக்கவர் யாரும்வாழ் தொண்டை நாட்டின்
மிக்கதோர் அணியியல் அது விளம்புவேன்.”

காஞ்சியைப் பற்றிக் கூறும்பொழுது, முத்தியைக் கொடுக்கினற அயோத்தி, மதுரை, மாயை, அவந்தி, காஞ்சி, துவாரகை, காயா என்னும் ஏழு தலங்களிற் காஞ்சியே சிறந்ததாக உமாதேவிக்குச் சிவபெருமான் கூறியதை ஞாபகப்படுத்துகின்றார். இப்படிச் சிறந்த காஞ்சி, பூவுலகம் என்னுந் தடாகத்தில் முளைத்த தொண்டை நாடென்னுந் தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி என வர்ணித்துள்ளார்.

“மாவுல கெங்கு மலர்த் தடமாகத்
தாவறு சீர்புனை தண்டக நாடே
மேவிய கஞ்சம தாவதின் மேவுந்
தேவினை யொத்தது சீர்பெறு காஞ்சி”

**கதைப்போக்கு**

இது காறும் ஆற்று, நாட்டு, நகர வர்ணனைகளைக் கவனித்தோம். இனிக்கதைப்போக்கை ஒவ்வொரு காண்டமாகச் சிறிது ஆராய்வோம். இப்படி ஆராயும்பொழுது, தமிழ்நாடே பல முக்கிய நிகழ்ச்சிகளுக்குக் களமாக விளங்குவதைக்காணலாம்.

தாரகனைக் கொன்றபின் தேவகிரியிலிருந்து தெற்கு நோக்கிச் சென்ற முருகப்பெருமான் திருவேங்கடமலை, திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவண்ணாமலை, திருவெண்ணெய்நல்லூர், விருத்தாசலம், தில்லைநகர் முதலிய தலங்களைத்தரிசித்த பின்னர், மணியாற்றங் கரையை அடைந்து தேவர்கள் வேண்டுகோளின்படி,

அங்க தேவதச்சனைக் கொண்டு ஒரு நகர் அமைப்பித்துத் தங்குகின்றார். அவரது தமிழில் "திருச்சேய்ஞலூர்" என்றும், வடமொழியில் "குமாரபுரம்" என்றும் வழங்கும். இவ்விடத்திற்றான் சண்டேசுர நாயனார் அவதரித்தார் என்பதுங் குறிப்பிடத்தக்கது.

மேலும், இவ்விடத்தில் ஒரு கோயில் அமைப்பித்துச் சிவபெருமானை முறையாக வணங்கினார். இவ்வழிபாட்டை ஏற்றுக்கொண்டு, சிவபெருமான் உருத்திரபாசுபத படைக்கலத்தை முருகப்பெருமானுக்குக் கொடுத்தருளினார்.

திருச்சேய்ஞலூரிலிருந்து புறப்பட்டுத் திருவிடைமருதூர், மாயூரம், திருப்புயலூர், திருவாரூர் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு, குறுக்கே வந்த பாலைவனத்தைக் கடந்து, திருப்பரங்குன்றை அடைந்தார். அங்கு தவஞ் செய்து கொண்டிருந்த பராசரமுனிவரின் புதல்வர்களுக்கு அருள் செய்த பினன்ர் திருச்செந்தூரையடைந்து, அங்கு தமக்கென ஒரு கோயிலைச் சமைப்பித்துக் கொண்டு தங்கினார்.

கச்சியப்பர் மேலே குறிப்பிட்ட தலங்களைப் பற்றிக் கூறும்போது அவற்றோடு சம்பந்தப்பட்ட புராண வரலாறுகளையுஞ் சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றார். இதனால் அவர்களுக்குத் தமிழ்நாட்டுத் தலங்களைப் பற்றிய அறிவு நிரம்ப இருந்தது என்பது புலப்படுகினறது.

### அசுர காண்டம்

முருகப்பெருமான் திருச்செந்தூரிலிருக்கும்பொழுது இந்திரனின் கேள்விப்படி வியாழபகவான், சூரன் முதலிய அசுரர்களின் வரலாற்றையும் தேவர்களுக்கு அசுரர்கள் செய்த துன்பங்களையும் எடுத்துக் கூறினார். இப்படிக் கூறும்பொழுதுதான், சூரனுக்கு அஞ்சி இந்திரன் இந்திராணியுடன் சீர்காழியிற் கரந்துறைந்த வரலாற்றையும், காவேரி வந்த வரலாற்றையுங் கூறினார்.

### மகேந்திர காண்டம்

இந்திரன் முதலிய தேவர்களின் துன்பத்தைக்கேட்ட முருகப்பெருமான், அசுரர்களுடன் யுத்தஞ் செய்து அவர்களை அழிக்கத் தீர்மானித்தார். ஆனால், யுத்தத்துக்குப் புறப்படுமுன்

தூதுவிடுவதே முறையென எண்ணித் திருச்செந்தூரிலிருந்து கொண்டே வீரவாகு தேவரைச் சூரனிடந் தூதனுப்பினார். வீரவாகு தேவர் தூது சென்று திரும்பும்வரை முருகப்பெருமான் திருச்செந்தூரிலேயே தங்கியிருந்தார்.

யுத்த காண்டம்

தூது தோல்வியுற்றதும் யுத்தம் ஆரம்பமாயிற்று. தமக்குத் தங்கும் வீடாக ஏமகூடம் என்னும் இடத்தைத் தாபித்துக் கொண்டார். இதைச் சிலர் கதிர்காமம் என்பர். யுத்தம் முடிந்தபின், திருச்செந்தூரை முருகப்பெருமான் அடைந்ததும், தேவர்கள் தங்கள் நன்றியறிதலைக் காண்பிப்பதற்காக, அவரை முறையாக வழிபாடு செய்தனர். இதன்பின்னர் முருகப்பெருமான் இலிங்கத்திலே சிவபெருமானைப் பிரதிட்டை செய்து ஆகம முறைப்படி வழிபாடு செய்தார்.

## தேவகாண்டம்: தெய்வயானை திருமணம்

மேற்கூறியபடி சிவபூசையை முடித்துக்கொண்டு, தேவர்கள் புடைசூழ, மயில்வாகனத்தில் ஏறிக்கொண்டு திருப்பரங்குன்றை முருகப்பெருமான் அடைந்தார். இங்கு தேவர்களின் விருப்பப்படி தெய்வயானையை மணஞ்செய்யத் திருவுளங்கொண்டார். இத்திருமணத்திற்குச் சிவபெருமானும் உமாதேவியாரும் எழுந்தருளினர். தேவரும் முனிவரும் வந்து கூடினர். பிரமா திருமணச் சடங்குகளுக்குத்தலைவராக இருந்து சகல கருமங்களையும் நடாத்தினார். இந்திரனும் இந்திராணியுந் தமது அருமைப் புத்திரியை முருகப்பெருமானுக்குத் தத்தஞ் செய்துகொடுத்தனர். பின்னர் பிரமா தம் மனத்தினால் ஒரு மாங்கல்யத்தைப் படைத்து முருகப்பெருமானதுதிருக்கரங்களிற் கொடுக்க, அதைத் தெய்வயானையின் திருக்கழுத்தில் தரித்தார். கச்சியப்பர் இதைப் பின்வருமாறு கூறுகின்றார்:

"செங்கமலத்திறை சிந்தையின் ஆற்றி
அங்கையில் ஈந்திட ஆண்டகை கொண்ட
மங்கலநாணை மணிக்கள மார்த்து
நங்கை முடிக்கொரு நறுந்தொடை சூழ்ந்தான்."

மேற்கூறிய மணம் தமிழர் பொருள் நூலின்படி கற்பு மணம் எனப்படும்.

(தொடரும்)

# நிறைவான உள்ளம் கொண்ட அமரர் திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு

**அ. சிவானந்தநாதன்**



(வள்ளல் மார்க்கண்டு அவர்கள் 29-10-2010 இல் கனடாவில் இறைவன் திருவடியை அடைந்தார். இறுதி யாத்திரை 01-11-2010 ஆம் திகதி நடைபெற்றது. இதனை முன்னிட்டு இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்.)

மனதில் உறுதி வேண்டும் வாக்கில் இனிமை வேண்டும். நினைவு நல்லது வேண்டும் குடும்பச் சுமை தாங்க வேண்டும். குலதெய்வம் பத்திரகாளி அம்பாள் அருள்புரிய வேண்டும் என்ற மனப்பாங்கினை உள்ளத்தில் நிறைவாகக் கொண்டு இறுதி மூச்சுவரையும் வாழ்ந்த அன்பர் கொடை வள்ளல் அமரர் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள். இவர் 29-10-2010ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். திருகோணமலையில் வாழ்ந்த செல்லத்தம்பி - பாக்கியம் குடும்பத்தினருக்கு மகனாக 30-12-1929 ஆம் திகதி பிறந்தார். இவரின் பிறப்பிடத்தை திருஞானசம்பந்த சுவாமிகள் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை என்று தாம் அருளிய தேவாரத்தில் போற்றியுள்ளார். இது மெய்யன்பர்களின் உள்ளத்தை ஈர்ந்து நிற்கும் தெய்வீகப் பூமியாகும். இக்குடும்ப முன்னோர்களின் குலதெய்வம் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயமாகும். திருக் கோணேஸ்வரப் பெருமானிடத்திலும் ஆறாத அன்புக்குரியவர்கள். அம்பாள் கோவில் பத்திரகாளி அம்மன் கோயில் சல்லி அம்மன் கோவில் ஆகியவற்றில் வைகாசி விசாகப் பொங்கல் பொங்கி வழிபடும் பாக்கியத்தையும் பெற்றவர்கள். மார்க்கண்டு அவர்கள் ஆரம்பக் கல்வியையும் உயர்கல்வியையும் திருகோணமலை இந்துக்கல்லூரியில் கற்றவர். இதன் பின்னர் அரசாங்கத்திணைக் களத்தில் பத்து வருடங்கள் பணிபுரிந்த பின்னர் வர்த்தகத்துறையிலும் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது வியாபாரத்தை யாழ்ப்பாணத்தில் தொடங்கி நல்வழியில் பொருளீட்டியுள்ளார் என்பது உண்மை. தன்னை நாடி வரும் மக்களுக்கு பொருளைக் கொடுத்து நிறைவு காண்பார். இது இவருக்குரிய தனிச்சிறப்பாகும். தான் தேடிய பொருளை நல்வழியில் கொடுப்பதிலும் அக்கறை கொண்டவர். திருகோணமலையில் வாழ்ந்த சுப்பிரமணியம் குழந்தைஅம்மாள்

குடும்பத்தில் பிறந்த ஒரே மகளான இந்திரா என்னும் நங்கையைத் தன் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றவர் மார்க்கண்டு அவர்கள். அவனருளால் ஐந்து செல்வங்களுக்குத் தந்தையாகவும் திகழ்ந்தார். இதில் மூவர் பெண்பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் முறையே சத்தியசீலன், ஜெயசீலன், சித்ரா, சசிதேவி, சரோஜினி என்ற பெயர்களைக் கொண்டவர்கள். இப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறையும் காட்டியுள்ளார். இவர் கனடாவிற்கு 1993ஆம் ஆண்டு வருகை தந்துள்ளார். இவ்வருகைக்கு முன்னர் ஏழாண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்தமை நினைவுகொள்ளத்தக்கது. இந்துசமயப் பேரவையின் தலைவர் கவிஞர் கந்தவனம் அவர்களின் அன்பிற்குரியவராகத் திகழ்ந்தார். அவரின் சமயப் பணியை உள்ளத்தில் நிறைவாகக் கொண்டு ஒழுகினார். இதனால் அவர் இந்துசமயப் பேரவையில் ஆயுட்கால உறுப்பினராகவும் திகழ்ந்தார். திரு. சிவ முத்துலிங்கம் அவர்களிடத்தில் மிக்க மதிப்பும் மரியாதையும் உடையவர். அவர் இல்லத்தில் தங்கி பல ஆண்டுகள் அவரின் நற்பணிக்கு பொருள் வளத்தையும் நல் ஆதரவையும் வழங்கி வந்தார். ஞானசுரபி ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் நிறுவப்பட்டது இந்துசமயப் பேரவையாகும். இவர் நிரந்தர ஆன்மீக வள்ளல். இவரின் நற்பணிகளை உள்ளத்தால் போற்றி இறுதிமூச்சு வரையும் ஒழுகியவர். வள்ளல் மார்க்கண்டு அவர்கள். இந்து சமயப் பேரவை வெளியிடும் நூல்களின் முதற்பிரதியை வாங்கி அகமகிழ்வார். இவர் நல்கிய ஆதரவு பல நூல்களை வெளியிடு வதற்கு ஊக்குவித்தது என்பது உண்மை. கனடாவில் வாழும் தமிழ் மக்கள் இந்துசமயப் பேரவை வெளியிடும் நூல்களை அகமலர்ச்சியோடு வாங்குவதில் மிக்க அக்கறை காட்டினால் அது அமரர் மார்க்கண்டு அவர்களுக்குச் செய்யும் கைமாறாகும். கனடாவின் மூத்த கோயில் றிச்மண்ட் கில் பிள்ளையார் ஆலயமாகும். இன்று கனடாவில் பல ஆலயங்கள் தோற்றம் பெற்றுள்ளது. 24-09-2004 இவ்வாலயத்தில் நாவலர் பெருமானின் 125ஆவது குருபூசையை முன்னிட்டு பேரவையினரால் செய்யப்பட்ட சிலையை முன்னிறுத்தி நாவலர் விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச்சிலையை பல ஆலயங்களுக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று வழிபாடுகள் நடத்தப்பெற்றது. 07-11-2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் சிலை நல்லூர் முருகன் ஆலயத்தில் பேரவையின் குருபீடத்துடன் வைத்து விழாநடத்தப்பட்டது. இப்பெருஞ்சிலையை நல்லமுறையில் அமைக்க

வேண்டும் என்றும் அவரின் பெரும்பணிகளை சகல மக்களும் அறிய வேண்டும் என்றும் காலத்தால் செய்யும் பணி அழியாப் புகழைத் தரவல்லது என்பதை உள்ளத்தால் நினைந்தவர்களில் சிறப்புக்குரிய அன்பர் திருகோணமலை மார்க்கண்டு அவர்கள். இப்பணிக்கு முன்பின் சிந்தை செய்யாமல் அகமலர்ச்சியோடு ஐயாயிரம் டொலர் தொகையை அன்பளிப்புச் செய்துள்ளார். தன்னலம் கருதாதுசெய்த இப்பணி இவரின் நற்பெயருக்கு வழிவகுத்துள்ளது. புகழை விரும்பாதவர் அடக்கமும் பொறுமையும் அன்பும் உள்ளவர். தமிழினப் பற்றுள்ளவர். இவை நல்லோர்க்குரிய நற்குணமாகும். இன்று நாவலர் சிலை பேச்மவுண்ட் வீதியில் 1473 இலக்கம் கொண்ட ஆத்மஜோதி இல்லத்தில் இடம்பெற்றுள்ளது. ஆத்மஜோதி நூல் நிலையத்திற்குரிய அலுமாரியின் ஒரு பகுதியை அன்பர் மார்க்கண்டு அவர்கள் தன் செலவில் செய்து கொடுத்துள்ளார். நாவலர் பெருமானின் தமிழ்த் தொண்டையும் சமயப் பணியையும் உள்ளத்தால் போற்றி வாழ்பவர் அன்பர் மார்க்கண்டு அவர்கள். இந்து சமயப் பேரவையினர் ஆத்மஜோதி இல்லத்தை வாங்குவதற்கு ஐயாயிரம் டொலர்களை அன்பளிப்புச் செய்த பரோபகாரி அமரர் அவர்கள் ஆவார். 01-11-2010ஆம் திகதி திங்கள் கனடாவில் நடைபெற்ற இறுதியாத்திரையில் கவிஞர் கந்தவனம் அவர்கள் இவரின் திருவுருவப்படத்தை ஆத்மஜோதி நிலையத்தில் வைக்க வேண்டும் என்ற கருத்தினை கூறியமை பாராட்டத்தக்கது. தற்பொழுது அவரின் திருவுருவப்படம் இல்ல நூல்நிலையத்தை அலங்கரிக்கின்றது. நாமும் அவரைப் போல் வாழ்ந்தால் நாமும் அழியாப்புகழை நிச்சயம் பெறுவோம். நாவலரின் காலப்பணி எல்லோர் உள்ளத்திலும் வெள்ளம் போல் பெருகிஓடவேண்டும் என்ற விளைவினை இறுதிமூச்சில் கொண்டவர் அன்பர் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள்.

---

## திருமதி பார்வதிப்பிள்ளை நடராசா அவர்களின் அமரத்துவச் செய்தி



ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை ஆயுட்கால உறுப்பினரும், திருக்கூட்ட உறுப்பினருமான புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பார்வதிப்பிள்ளை நடராஜா அவர்கள் 11-02-2011 அன்று அமரத்துவம் அடைந்தார்.

இவர் பல வருடங்கள் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் பெரும் பேறு பெற்றவர்.

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

1. நல்லவர்கள் கூட்டத்தை பக்தி மயமுள்ள இடங்களிலேதான் காணலாம்.

2. நமது முன்னோர்கள் இறைவன் வெண்ணையில் நெய்போலத் தோன்றும் இடங்கள் மூன்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். அவை குரு, லிங்கம், சங்கமம் எனப்படும்.

3. சங்கமம் என்பது சற்சங்கம் ஆகும் சற்சங்கம் கிடைக்க வேண்டுமானால் இறை வழிபாடு முக்கியம்.

4. ஆண்டவன் அடியார்கள் நெஞ்சில் உறைபவன். ஆதலினால் அடியார்கள் உயர்ந்தவர்களாகின்றார்கள். ஆண்டவன் பக்தனுக்கு அருள் செய்ய விரும்பினால் தனது அடியவன் மூலம்தான் அருள் செய்ய முடியும். ஆண்டவனுக்குக் கொடுப்பது அடியவருக்குச் சேராது. அடியவருக்குக் கொடுப்பது ஆண்டவனுக்குச் சேரும்.

5. மனம் ஒன்றபடாமல் வாழ்நாள் முழுவதும் பிரார்த்தனை செய்யலாம். அதனால் யாது பயன். ஐந்து நிமிட நேரம் மனத்தை ஒருங்கிணைத்துப் பிரார்த்தனை செய்தால் அதுவே உயர்ந்தது.

6. மனதை புலன்வழி செல்லவிடாது எண்ணை ஒழுக்குப்போல விடாது நினைப்பதே தியானம் எனப்படும்.

7. பிரார்த்தனை உள் உணர்ந்து செய்யும்போது உள்ளத்தை உருக்கும். அந்த நிலை ஆழ்ந்த தியானத்திற்கு அழைத்துச் சென்றுவிடும்.

8. ஆரம்பசாதகன் தியானத்தில் ஈடுபடும்பொழுது முதலில் மனம் எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணும். விடாப்பிடியாக நாமும்தியானத்தில் ஈடுபட மனமும் வழிக்கு வரும். தொடக்கத்தில் துள்ளிக் குதித்த மனம் தியானத்தில் நாம் மேலோங்க சொன்னபடி நடக்கும்.

9. பயிற்சி எதையும் சுலபமாக்கி விடுகிறது. இதனைத்தான் சாதனை என்றும் கூறுவர்.

10. பயிற்சியால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. ஒன்றைப் பயிலும்போது சிரமங்கள் இருக்கலாம். சோர்வு ஏற்படலாம். விடாமுயற்சியும் தொடர் பயிற்சியும் எதையும் சுலபமாக்கிவிடும்.

11. எந்தக் காரியத்தைச் செய்தாலும் குழப்பமில்லாமல் நிதானமாகச் செய்யக் கற்றுக் கொள்வது அவசியம். எங்கு போனாலும் உங்களோடு பிரச்சினைகளை தூக்கிச் செல்லாதீர்கள். பிரச்சினைகளை எந்த நேரத்தில் பரிசீலித்துத்தீர்வு காண வேண்டுமோ அந்த நேரத்தில்தான் பரிசீலிக்க வேண்டும். தவிர தேவை இல்லாத நேரங்களில் அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருப்பதால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கப் போவதில்லை. மாறாக அநாவசியமான குழப்பங்களுக்கு ஆளாக வேண்டிவரும். மனநிம்மதியும் கெட்டுப் போகும்.

12. எந்தக் காரியத்தைச் செய்தாலும் நம்பிக்கையோடு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். அசையாத நம்பிக்கை உள்ள பாமரனும் பெரிய காரியங்களைச் சாதித்து விடமுடியும். நம்பிக்கையோடு காரியங்கள் செய்யும்போது மனச் சஞ்சலம் நம்மை அணுகாது.

13. பிரச்சினைகளைக் கண்டு அச்சமடையக் கூடாது. தீராத பிரச்சினை என்று நாம் எண்ணக்கூடியதுகூட காலப்போக்கில் தீர்ந்துவிடும். காலமே அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகைகளையும் காட்டிவிடும்.

14. மனம் நிம்மதி பெறுவதற்கு தியானம் ஒரு சிறந்த வழி. நம்முடைய பெரியவர்கள் தங்களுடைய அனுபவ வாயிலாக இதைக் கண்டறிந்து சொல்லியுள்ளார்கள். தியானப் பயிற்சியை நன்றாக வளர்த்து விட்டால் சிறிது நேரம் தியான நிலையில் இருந்தே மனதை அமைதிப்படுத்திவிட முடியும்.

15. தியானப் பயிற்சியில் நன்கு பயிற்றப்பட்டவர்கள் மனப் போராட்டம் ஏற்படும் போது அல்லது மனம் சஞ்சலம் அடையும்போது ஓரிரு நிமிடம் தியான நிலையில் இருந்தால்கூட மனச் சாந்தி கிடைத்துவிடும்.

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

HOMELIFE
HIGHER STANDARDS

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# APPLEMORE
# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe.

## Ontario Emission Inspection



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**
**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION**
**MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA
Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**
**TEL: 416-807-7468**
**416-410-6401**